# சிரித்திரன்




CHIRITHIRAN

• A CARTOON MAGAZINE

சித்திரை 1970
விலை: சதம் -/45.

இலங்கையரால் இலங்கையில் தயாரிக்கப்பட்ட கைத்தறிச் சேலைகளை உபயோகித்து, இலங்கையருக்குத் தொழில் கொடுப்பதோடு, பொருளாதாரத்தையும் பெருக்குங்கள்!

எங்களிடம் ரேயன், நைலோன், சரிகை நூல், தையல் நூல்கள், கைத்தறி உபகரணங்கள், சாயம் கிடைக்கும்.

பருத்தி நூல்களுக்கு உறுதியான சாயம் ருத்தல் ஒன்றிற்கு ரூபா 1-75 வீதம் போட்டுக் கொடுக்கப்படும்.

# குமார் ஏஜென்ஸி

**128, செட்டியார் தெரு, கொழும்பு - 11**

**போன்: 79632**

**தந்தி: 'கைத்தொழில்'**

# நிலைக்கண்ணாடி

இளைஞர்களைத்தான் ஒரு நாட்டின் மூலப்பொருள் என்று சொல்லுவேன். சமுதாயத்தின் சக்தி அவன்; ஓர் இனத்தின் இதயம் அவன்; ஒரு நாட்டின் மூச்சும் முதுகெலும்பும் அவன்தான். இந்த வாலிப மூலப் பொருளைக் கொண்டுதான் ஒரு நாடு வாழவேண்டும். காளையரின் வீரியத்தில்தான் நாளைய சுபீட்சத்தைக் கட்டி எழுப்பவேண்டும். வாலிப சக்தியை வசப்படுத்தினுல்தான் நாடு வளம்பெறும்.

நம் நாடு ஒரு சுடுகாடு. வாலிப சக்திக்கு ஒரு வரண்ட பாலைவனம். இளைஞரின் எழுச்சிக்கும் அவர்கள் உயர்ச்சிக்கும் இது ஒரு இருண்ட பூமி. வலிமை படைத்த வாலிபர்களுக்கு இங்கு வாழ வழியில்லை. படித்தவர்கள் இங்கு பயனற்றுக் கிடக்கிருர்கள். யுவ சக்தி இங்கு சவமாகிப் போகிறது.

வீறுகொண்ட இளைஞர்களுக்கு வெறுமையைக் காட்டுகிருர்கள் நமது ஆட்சியாளர்கள். வாழ்க்கைக்குப் பயன்படாக் கல்வியை வகுத்து, நாட்டின் வளத்திற்குப் பயன்படாப் பட்டங்கள் வழங்கி, எதிர்கால சந்ததிக்கு இருண்ட எதிர்காலத்தைக் காட்டியிருக்கிருர்கள் எமது அரசியல்வாதிகள்.

வாலிப சமுதாயம் இனியும் வாழாவெட்டிகளாக இருக்கமுடியாது. நாடு நமக்கு நலம் தேடும் என்று படித்தவர்கள் பகற்கனவு காணக்கூடாது. ஆட்சியாளர்களை நம்பினுல் ஆகப்போவது ஒன்றுமில்லை. உங்களது சுபீட்சம் உங்களது கையில்தான்.

கல்வியை உத்தியோக தகைமையாகக் கருதவேண்டாம். கல்வி என்பது அறிவாற்றல். சிந்தனையை வளர்க்கும் சித்தப் பயிற்சி அது. உலகத்தை அறிந்துகொள்ளும், வாழ்க்கையை உணர்ந்துகொள்ளும் பாடம்தான் கல்வி. கல்வி கற்பவன் வாழ்க்கையைக் கற்கிருன், வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்ந்துகொள்ளக் கற்கிருன்.

நீங்கள் வாழ்ந்துகொள்ள நீங்களே வழிதேட வேண்டும். உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆற்றல் உண்டு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு சக்தி. வலிமை உங்கள் சதையில் உண்டு. புரட்சி உங்கள் இரத்தத்தில் உண்டு. புதுமையாகச் சிந்தித்தால் புதிய பாதை தோன்றும்.

நவ யுகம் என்பது இளைஞர்களது உலகம். வரப்போவது வாலிபரின் வசந்த பூமி.

# சிறுத்தொண்டர் நாடகம்



சிறப்புக் கதை

# சுட்டு ரொட்டி



**வ**ழு வழுவென்று வான் முட்ட நின்ற கருப்பந்தைல மரங்களினூடே கருஞ்சாரையாய் ஒளிந்தும் மறைந்தும் ஓடிக் கொண்டிருக்கிறது அந்தத் தார் ரோட்டு.

இருபுறமும் பரந்துகிடக்கும் பசுந் தேயிலை, மெலிந்த அந்தப் பாதையை மேலும் மெலிவாக்கிக் காட்டிக்கொண்டிருந்தது.

தோட்டத்து லொறி உரசி உரசி பாதையோரத் தேயிலை முள்ளாய் நீட்டிக்கொண்டிருக்கிறது. பாதையை இன்னும் அரை அடி அகலப்படுத்தினால் ஓரத்துத் தேயிலை உரசுப்படாது என்பது உண்மைதான் என்றாலும் வெட்டப்படும் தேயிலையால் தோட்டம் நட்டப்படுவது ஆயிரக்கணக்கில் என்பது வெள்ளைக்காரனின் பொருளாதார மூளைக்குப் பெரிய விஷயமல்ல.

கூடையும் தலையுமாக மலையில் நிற்கும் தாய்மார்களுக்கு குட்டிச்சாக்கும் தலையுமாக பகல் சாப்பாடு கொண்டுபோகின்றன சிறிசுகள். குட்டிச் சாக்கிற்குள் இருப்பது பெரும்பான்மையாகக் கருகச் சுட்ட ரொட்டியும் கறுப்புச் சாராயப் போத்தல் நிறைய வெறுந் தேனீருந்தான்.

## —தெளிவத்தை ஜோசப்—

மலைக்குத் 'தண்ணி' கொண்டு போகும் சிறுவர் சிறுமியர் அனைவரும் போய்விட்டனர். மிகவும் பிந்திவிட்ட 'லெட்சுமிக்குட்டி' தலையில் தொங்கும் குட்டிச் சாக்கை முதுகுடன் அணைத்துப் பிடித்தவண்ணம் ஓடினாள்.

'தடக் தடக்' கென்று குட்டிச்சாக்கு ஆடும்போது தளும்பி ஊற்றும் தேனீரின் சூடு முதுகைத் தடவும்போது நடப்பாள்.

அம்மாவின் கோப முகம் மனதைத் தடவும்போது ஓடுவாள்.

ஓட்டம் கூடக் கூட குட்டிச் சாக்கின் ஆட்டம் கூடியது.

ஆட்டம் கூடக்கூட குட்டிச் சாக்கை தொங்க வைக்கும் கயிறு வலுவிழக்கிறது.


ஓடிக்கொண்டே உச்சந் தலையில் உறுத்தி கயிற்றை இலேசாக அசைத்தாள்.

ஏற்கனவே வலுவிழந்திருந்த கயிறு உயிரிழந்தது.

குட்டிச் சாக்கு பாதையில் கிடந்தது.

தேயிலைச் சாயம் ரோட்டில் ஓடியது. ரொட்டி எல்லாம் ஒரே போத்தல் ஓடு நுணுங்கி ஒட்டிக் கிடந்தது.

## விசித்திரக் கற்பனை



ஓ வென்று கதறினாள் லெட்சுமி. ஆயா கொன்றுவிடுவாளே என்ற பயம்.

'ஏம்புள்ளே போட்டு ஓடச்சிட்டியோ...?'

உடைந்த போத்தலையும், ஊறிக்கிடந்த ரொட்டியையும் வெறித்து நோக்கியபடி மலைத்துப் போய் நிற்கும் லெட்சுமியை கேட்டாள் எதிரே வந்த சோதி.

'ஆமாண்டி... எங்காயா கொன்னுடுமே' என்று விக்கலும் விம்மலுமாகக் கூறிய லெட்சுமியைப் பரிதாபமாகப் பார்த்தாள் சோதி.

'நீ ஒங்கக்காவுக்குத் தண்ணி கொடுத்துட்டு வந்துட்டியாடி?'

'இல்லே புள்ளே, எங்கக்கா மலையில விழுந்து லொறியில போட்டுக்கொண்டு போயிட்டாங்களாம்... அதான் திரும்பிட்டேன். தண்ணி எல்லாம் அப்படியே இருக்கு... நீ லயத்துக்கு வந்தியா...?'

'ஆமா மலைக்குப் போய் என்ன செய்ய!'

'ஒங்க ஆயா அந்திக்கு வந்து கொன்னுடுமே...'

'நானு வீட்டுல இருந்தாத்தானே அடிக்கும்... எங்குட்டாச்சும் ஓடிப் போயிட்டேன்னா?'

'ஓடிப்போகப் போறயா...'

வெள்ளரிப் பிஞ்சில் வெட்டு விழுந்தாற்போல் தெறித்து நின்றது அந்தச் சொல்.

'ஓடிப்போறியா...!'

'ஆமா! ஆமா!! எங்க ஆயா வரயில வீட்டுல இருக்கமாட்டேன்.'

'ஓடிப்போய் என்ன செய்வே!'

'எங்குட்டாச்சும் செத்துப் போவேன்'

திக்கென்றது சோதிக்கு.

'ஒங்க ஆயா அடிப்பாங்கன்னுதானே ஓடிப்போவேன், செத்துப்போவேன்கிறே... அடி வாங்காமல் இருக்க நான் ஒண்ணு சொல்லவா!'

'என்னது...?'

அடியிலிருந்து தப்பிக்கும் நப்பாசை லெட்சுமிக் குட்டியை விடவில்லை.

'என் குட்டிசாக்குல இருக்குற தண்ணியைக் கொண்டுபோய் கொடுத்திடேன்'

'என்னது...!'

பாம்பை மிதித்தவள் போல் பதறிப்போனாள் லெட்சுமி.

எங்காயாவுக்குத் தெரிஞ்சா வெட்டிப் போட்டுடும்...'

'தெரிஞ்சாத்தானே...' மிகச் சாவதானமாகக் கூறினாள் சோதி. 'எப்படித் தெரியும் நானும் நீயும் சொல்லாட்டி' லெட்சுமி தயங்கவே சோதி தைரியமூட்டுகின்றாள்.

'நீ பயமில்லாமெ கொண்டு போ புள்ளே... ஒப்புறுணை நான் சொல்ல மாட்டேன்.'

அந்த நேர இக்கட்டை சமாளித்தால் போதும் என்றிருந்த லெட்சுமியும் 'சரி' என்று ஒத்துக் கொண்டாள்.

குட்டிச் சாக்குத் தலை மாறியது.

இரு சிறிசுகளும் எதிர் எதிர்த் திசையில் விரைந்தனர்.

—□—

'அம்மா... அம்மோவ்... அக்கா மலையில விழுந்திருச்சாம்'

ஒப்பாரி வைத்தபடி வீட்டுக்குள் ஓடினாள் சோதி.

'சரிதான் வாடா கண்ணு அக்காவுக்கு ஒண்ணும் ஆயிடலே...இதோ படுத்திருக்கு.. தேத்தண்ணிக் குட்டிச் சாக்கு எங்கம்மா...?'

சோதிக்குத் திக்கென்றது. சமாளித்துக் கொண்டாள்.

'அம்மா... அம்மோவ்...'

சிறுமி கண்ணைக் கசக்கிக் கொள்ளுகின்றாள்.

'என்னம்மா நடந்துச்சி...' தாய் பதறுகின்றாள்.

'அக்கா விழுந்துறுச்சேன்னு ஓடியாந்தேனா... குட்டிச் சாக்கு நழுவிக் கீழே விழுந்து...'

# மணமகள் தேவை!

கல்முனைக் கலைக்கொழுந்தன்

துணைவி ஒன்று தேடுகிறேன் - தூய
துணைவி ஒன்று தேடுகிறேன்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும்
உலுத்தயர் நிறைந்த இந்நாட்டில், பாச
வெள்ளத்தே ஊறிடும் உள்ளம் திறந்து
வீட்டிற்கு நல்லொளி ஊட்டிடும் உத்தமத்

துணைவி ஒன்று தேடுகிறேன் - தூய
துணைவி ஒன்று தேடுகிறேன்.

மினியுடுத்து மருட்டிடும் மங்கையர்
மேன்மைகெட்டு நடக்கும் இந்நாட்டில், மேலிட
மேனி மறைத்து மானங் காக்கவே
முந்தானை வைத்துச் சேலை உடுத்திடும்

துணைவி ஒன்று தேடுகிறேன் - தூய
துணைவி ஒன்று தேடுகிறேன்.

வரவுக்கு மேலாய்ச் செலவு மேற்கொள்ளும்
வல்ல வனிதையர் வாழு மிந்நாட்டில், நாயகன்
வரவை ஓர்ந்துமே செலவு கைக்கொள்ளும்
வாழத் தெரிந்த வண்டமிழ் நற்குடித்

துணைவி ஒன்று தேடுகிறேன் - தூய
துணைவி ஒன்று தேடுகிறேன்.

பொறுமை கொன்று பொரிந்து தள்ளிடும்
பூவையர் ஆட்டம் பொலிந்த இந்நாட்டில், மனப்
பொறுமை யென்ற நகையை யணிந்து
பெருமை யோடில்லம் பேணத் தெரிந்த

துணைவி ஒன்று தேடுகிறேன் - தூய
துணைவி ஒன்று தேடுகிறேன்.

மூலைக்குள் கள்ளக் காதலனை மூடும்
மூழிப் பெண்கள் வாழுமிந்நாட்டில், மண
மாலையிட்டவனைத் தேவாய் மதிக்கும்
மாண்புடை மாமியார் பெற்ற நல்மாணிக்கத்

துணைவி ஒன்று தேடுகிறேன் - தூய
துணைவி ஒன்று தேடுகிறேன்.

---

'போனா போவட்டு அழா தேடா ராஜா, கால்ல கையில போட்டுக்கிரும வந்தியே... அதே அந்த ஏழுமலையான் புண்ணியம்'

—□—

லெட்சுமியின் அப்பா நாட்டுக்கு நடந்துகொண்டிருக்கின்றார்.

நாலு மணி பிந்திவிட்ட தென்றல் நாட்டுக்குப் போகாமல் இருக்க முடியாது அவரால்.

ஊற்றும் மழையாயிருந்தாலும் 'உக்குவா' ஊற்றும் தண்ணீரைச் சுவைக்காவிட்டால் அவருக்குத் தூக்கம் வராது.

'என்ன கங்காணி கூட்டம்... லவுடாஸ் பீக்கரு சத்தம் கேட்குது...!'

எதிரே வந்துகொண்டிருந்தவர் கேட்டார்.

'வெட்டிப் பயலுக தெரியாதா! சாதிகள் இல்லேடி பாப்பான்னு யாரோ பாடினாராம்... இவுக அதை எடுத்துக் கூறுருக. சாதி கீதின்னு நமக்குள் நாமளே அடிச்சுக்கக் கூடாது. எல்லாரும் ஒரே சாதி' அப்படி இப்படின்னு என்னென்னமோ பேசுறுனுக சின்னச் சாதிப் பயலுக...

ஒத்துமை அது இதுன்னு சொல்லித் தங்களுடைய கீழ் சாதிக் குறையை மறைக்கப் பாக்கிறுனுக. தெரியாமயா பள்ளு பறை பதினெட்டுன்னு பிரிச்சு வெச்சிருக்கு...'

அவர் நடந்துவிட்டார் நாடு நோக்கி.

—□—

ஒடிக்கும்போதே தெறித்து விழுமளவுக்கு முறுகச் சுட்ட ரொட்டி. பொன்னிறத்தில் மொறு மொறுவென்று.

கொண்டுவந்தவள் சோதி. கூட நின்றது லெட்சுமி. இடம் லெட்சுமியின் இஸ்தோப்பு.

'ரெண்டுபேரும் சாப்பிடுவோம்... எங்கம்மாதான் குடுத்தாங்க... உனக்கும் கொடுக்கச் சொல்லி...'

புடும்போதே நாவூறிற்று லெட்சுமிக்கு.

ஒரு துண்டு ஒடித்து வாயில் வைக்கப் போகையில் பளார் என்று முதுகில் அறையால் ரொட்டித் துண்டு எகிறிப்போய் விழுந்தது.

'நீ நாசமாப்போக... ஏன்டி என் வயித்துல பொறந்துட்டு மானத்தை வாங்குறே ...

சனியனே. கொஞ்சமாச்சும் சூடு சொறணை இருக்கா ஒனக்கு.

பத்திரகாளியாய் நிற்கும் தாயைக் கண்டதும் பதறிப் போனுள் லெட்சுமி. ஆயா இப்போது வருவாள் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

'அந்தச் செறுக்கி வீட்டுலே இருந்து கொண்டாந்து நீ வாயில வைக்கலாமாடி. பறை பள்ளு நொளை நூத்தெட்டும் ஒனக்கு ஒண்ணுதானு... நாற நாயே...'

கன்னத்திலும் முதுகிலுமாக மகளைப் பிய்த்து வாங்கிவிட்டாள் அந்த மேல்சாதித் தாய்.

மலையிலிருந்து விரட்டப் பட்ட ஆத்திரம் வேறு.

சிறந்த நகைகளை உருவாக்கும் 'செட்டியார் தெரு' **அன்னலக்ஷ்மி நகைமாளிகை ஸ்தாபனத்தார்**, சிறந்த எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளிக்குமுகமாக இம்முறை வெளியாகும் 'சிறப்புச் சிறுகதை'க்கு, ரூபா 50/- சன்மானம் வழங்குகின்றனர்.

'இரு ஒங்கப்பா வரட்டும். அந்தப் பறச் செறுக்கியோட சேராதே சேராதேன்னு எத்தனை வாட்டி சொல்றது. வரட்டும் வெட்டிப் பொதைக்கச் சொல்றேன்...'

இல்லாயா தெரியாமச் செஞ்சுட்டேன் என்று நடுங்கியவாறு மூலேயோடு மூலேயாய் முடங்கிக் கொண்டு நின்ருள் லெட்சுமி.

'நான் வாயில் வைக்காத அந்த வீட்டு ரொட்டிக்காக என்னை இப்படி வெளுத்துக் கட்டுகிருயே அன்று ஒரு ரொட்டியையும் தின்று தேத்தண்ணீரையும் குடிச்சியே அது...,

இல்லாத ஒன்றை இருட்டில் தேடும் அந்தத் தாயையே வெறித்து நோக்கிக்கொண்டிருந்தாள் லெட்சுமி.

---

**வாசக நேயர்களுக்கு!**


பேனு நண்பர் பகுதியும், ச. கீதபொன்கலன் எழுதிய 'இதயம்- நீ -கமலம்' — சிறுகதையும் அடுத்த இதழிலிடம்பெறும்.


சிரித்திரனுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

# ஸ்டார் ஜுவல்லர்ஸ்,

**90, செட்டியார் தெரு, கொழும்பு- 11**

**தொலைபேசி· 29727**




□—□

பொ. நாகேஸ்சன், தெனியாய.

கே: ஆண்டவன் நல்லவர்களை மட்டும் ஏன் சோதிக்கிறுர்; அக்கிரமம் செய்யும் படு பாவிகளைத் தண்டிப்பதில்லையே?

ப: பித்தளையைப் புடம் போடுவதில்லையே.

ஃ

ப. கனகராசா, கல்முனை.

கே: வாழ்க்கையைச் சக்கரத்திற்கு ஒப்பிடுகிறுர்களே... ஏன்?

ப: புழுவைக் கோழி சாப்பிடுகிறது; கோழியை மனிதன் சாப்பிடுகிறுன்; மனிதனைப் புழு சாப்பிடுகிறது என்பதால்.

ஃ

பூ. கஜேந்திரன், ஊரெழு.

கே: இக்கால ஆலயம் எது?

ப: தொழில் இணைப்புக் காரியாலயம்.

ஃ

★ திருமதி விஜயா மகாலிங்கம், கொழும்பு-13.

கே: அடுத்தமுறை இங்கு தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடக்கவிருப்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: இலங்கையில் தமிழ் இருந்ததா என்று புதைபொருள் ஆராய்ச்சி நடாத்துவார்கள்.

ச. சபாநேசன், யாழ்ப்பாணம்.

கே: மஞ்சள் பூசிய மாதர், இன்று 'மா'ப் பூசுவது எதற்காக?

ப: 'மா' தரிப்பவர்கள் தான் 'மாதர்'கள் என்று கருதுகிறுர்கள் போலும்.

ஃ

சர். ஏசையா, கொழும்பு.

கே: கடவுள் இல்லையென்று சொல்பவரைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: தாமே கடவுளென்று நினைக்கிறுர்கள் போலும்.

ஃ

வழிப்போக்கன், தொண்டமானுறு

கே: மாறி மாறி மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகளுக்கு, மக்கள் என்ன கைம்மாறு செய்தல் வேண்டும்?

ப: அவர்கள் பிறந்த தினத்தை நாமெல்லோரும் கொண்டாடவேண்டும்.

ஃ

எச். எம். எம். கலீல், அலவத்துக்கொடை.

கே: இலங்கைத் தமிழர்களுக்கு எப்போது விழிப்புணர்ச்சி ஏற்படும்?

ப: தமிழ் மக்களை ஓராட்டும் அரசியல்வாதிகள் உறங்கிய பின்பு.

ஃ

அ. பற்குணராசா, சித்தன்கேணி.

கே: கலைஞனால் கலை இன்று வரை வாழ்கிறதா, அன்றிக் கலையால் கலைஞன் வாழ்கிறுனு?

ப: மயில் ஆடுவதும், குயில் கூவுவதும் கூலிக்காகவில்லைத் தம்பி.

ஃ

க. குலேந்திரன், கரவெட்டி.

கே: உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதில் மறைந்துள்ள மர்மம் யாது?

ப: உதட்டால் மேடையில் ஏற்றி, உள்ளத்தால் பாடையில் வைக்கும் மர்மம்.

ஃ

பரிமளாதேவி, சாவகச்சேரி.

கே: தமிழர் பொதுவாகக் கறுப்பாகவும், ஆங்கிலேயர் வெள்ளையாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன?

ப: தமிழன் ஒருவனில் ஒருவன் காய்வதால் கறுத்துப் போனுன் போலும்.

ஃ

வே. எக்கிலாதேவி, திருநெல்வேலி

கே: அமெரிக்கர்கள் 'ராக்கட்'டின் உதவியுடன் சந்திரமண்டலத்திற்குப் போகிறுர்கள். தமிழர்கள்...?

ப: கையிலிருக்கும் சந்திர மேட்டை ஆராய்ச்சி பண்ணுகிறுர்கள்.

## சிரித்திரு

''இடை இருக்கிறதா இல்லையா என்பது அந்தக் காலத்துக் கேள்வி. உடை இருக்கிறதா இல்லையா என்பது இந்தக் காலத்துக் கேள்வி.'

—ம. பொ. சி.

**வே. மார்க்கண்டு, கிளிநொச்சி.**

கே: மகுடியாரே! ஒரு தனி மனிதனுக்கும், ஓர் அரசியல் வாதிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: தனி மனிதனுக்கு எதிர் காலம் இல்லை என்று பயமுறுத்தித் தனது எதிர்காலத்தை வகுத்துக்கொள்பவர் அரசியல் வாதி.

ஃ

**க. தவமணி, சாவகச்சேரி.**

கே: மனிதன் எதற்காகச் சாகிறான்?

ப: இறப்பவரின் இன்ஸ்சூரன்ஸ் பொலிசியால் இனத்தவர் வாழ.

ஃ

**சு. கந்தசாமி, கெந்தலே.**

கே: ஹரிச்சந்திரன் போல் நடித்து, ஏமாற்றுபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: நரிச்சந்திரன்.

ஃ

**எஸ். ஏ. பாலசிங்கம், ஒட்டுசுட்டான்.**

கே: மகுடியாரே, உமக்குச் சந்திரமண்டலம் போக ஆசையில்லையா?

ப: அயல் தீவிற்குப் போவதற்கு ஒரு நல்ல படகையே காணோம்; சந்திர மண்டலம் போக, எங்கே ஐயா ராக்கட்.

**செல்வி. பொ. விஜயமாலா, கொடிகாமம்.**

கே: மனிதனால் சாதிக்க முடியாதது ஏதும் உண்டா?

ப: உம்மால், எனக்கொரு சுவீப் விழச் செய்ய முடியுமா தங்கையே!?

ஃ

**கேணிவண்ணன், நெடுங்கேணி.**

கே: வருகிற தேர்தலில் அம்மா கட்சியா, ஐயா கட்சியா நடைபெறுமென்று பந்தயம் போடுவோமா?

ப: ஏன் தம்பி பந்தயம்? அம்மா கட்சிகள் தானே சோஷலிஸ பாதையில் பக்குவமாகப் போகின்றனவாம்.

**க. மார்க்கண்டு, கரவெட்டி.**

கே: திருவள்ளுவர், ஔவை, போன்றவர்கள் இன்று நமது நாட்டிலிருந்தால்...?

ப: சங்கக் கடையில் கூப்பன் புத்தக அரங்கேற்றத்திற்கு நிற்பார்கள்.

ஃ

**சி. மகேஸ்வரி, வல்வெட்டித்துறை**

ப: நமது விஞ்ஞான உலகச் சாதனையென்ன?

ப: கார் இன்னும் செய்யவில்லை; புகார் ஏராளம் செய்கிறோம்.

ஃ

**மு. மனோன்மணி, வெள்ளவத்தை**

கே: எப்படிப்பட்டதை நாம் வெறுக்க வேண்டும்?

ப: கஞ்சன் வீட்டு விருந்தையும், அனுபவமில்லா டாக்டரின் மருந்தையும்.

★ இந்த அடையாளமிட்ட கேள்வி ரூபா 5/- ஐ பெறுகிறது.

### ''மஞ்சள் குங்குமம்'' சான்றிதழ்

| பாடம் | புள்ளிகள் | தகுதி |
|---|---|---|
| நடிப்பு | — 65 — | திறமை. |
| சங்கீதம் | — 55 — | திறமை. |
| பாடல்கள் | — 55 — | திறமை. |
| ஒளி | — 40 — | சாதாரணம். |
| கெமரா | — 40 — | சாதாரணம். |
| கதை | — 35 — | சாதாரணம். |
| டைரக்ஷன் | — 35 — | சாதாரணம். |
| **மொத்தப் புள்ளிகள்:** | 325 | |
| **சராசரிப் புள்ளி:** | 46 | |

பரீட்சார்த்தி வகுப்பேற்றப்பட்டிருக்கின்றார். ஆனால் கடைசி இரண்டு பாடங்களிலும் கட்டாய கவனம் செலுத்தவேண்டும்.

கையொப்பம்: **'இரையன்'**

[தமிழ் ரசிகர்களுக்காக]

# நான்கு துப்பாக்கிகளின் நடுவே..?

—[ சரோஜினிதேவி ]—

[ **எச்சரிக்கை:** இருதய பலவீனம் உள்ளவர்கள் இப் பயங்கரக் கதையை தனிமையில் இருக்கும் வேளைகளில் தயவுசெய்து படிக்கவேண்டாம். ]

ஷ்ஷறக்...ஷ்ஷறக்...ஷ்ஷறக்...

எங்கேயோ மிக அருகில் ஒரு விசித்திரச் சத்தம். சற்று நேரம் மௌனம் மீண்டும்...

ஷ்ஷறக்...ஷ்ஷறக்... தொடர்ந்தும் அதே ஓசை.

நடுநிசி. கும்மிருட்டு, அடர்த்தியான யானைக் காடு. இந்நேரத்தில் இச் சத்தம்... காய்ந்த சருகுகளின் மேல் நிதானமாக நடந்துவரும் அடியோசை. யாராவது மனிதனா?... இல்லையில்லை. ஏதோ பயங்கர மிருகம் தான். ஒருவேளை... யானையாக இருக்குமா? சேச்சே, யானையின் அடி இவ்வளவு நிதானமாக இருக்காது. பின்...?

ஷ்ஷறக்... ஷ்ஷறக்... ஷ்ஷ. சத்தம் நின்றுவிட்டது. ஒரு நிமிடம்...இரு நிமிடம்... மூன்று நிமி...

கூஊஊஊ...!

காது செவிடுபடும் ஒரு பயங்கரக் கூச்சல் இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு காடு முழுவதும் முட்டி மோதி எதிரொலிக்கின்றது.

பேய்! ஆம். பேயின் கூச்சல் தான். இல்லையில்லை. இது அதை விடக் கொடூரம். நிட்சயமாக முனிதான்!

சட பட பட்...சட சட்...கிறீச் கீச்...! கூச்சல் கேட்டு விழித்துக் கொண்ட பறவைகளின் குழப்பம். சற்று நேரம் தான். மீண்டும் மயான அமைதி.

தூரத்தே ஒரு வெளிச்சம். சிறிய பிரகாசமான ஒளி. டார்ச் லைட்டா?... இல்லையில்லை. ஏதோ எரிகின்றது. இப்பொழுது அந்த வெளிச்சம் அங்குமிங்குமாக அசைந்து மறைவதும் தெரிவதுமாக... மெல்ல... மெல்ல... நெருங்கி வருகின்றது. பிசாசு!... சந்தேகமேயில்லை, கொள்ளி வாய்ப் பிசாசுதான்!

கூச்சலிடும் முனிக்கும் ஒளி விடும் கொள்ளிவாய்ப் பிசாசுக்கும் என்ன தொடர்பு?

வெளிச்சம் நெருங்கி வருகின்றது. கூடவே ஒரு உருவம்... மனித உருவம் மாதிரி... கையிலே நெருப்பை ஏந்தி வருகின்றது! மறுகையில்...? பளபளக்கும் வெட்டுக்கத்தி!

கொள்ளிவாய்ப் பிசாசிடம் வெட்டுக் கத்தியா? இரும்பைக் கண்டாலே பேய் வராதென்பார்களே. பேயிடமே இரும்புக் கத்தியா? ஏதோ மாருட்டம்...ஆம், இது பேய் மாருட்டம்! எப்படித் தெரிந்துகொள்வது? சுலபமான வழி... கால்கள்... பூமியிலிருந்து ஒரு அடி உயரத்தில்... இல்லையில்லை பூமியில் பதித்தே நடந்து வருகின்றது. கொள்ளிவாய்ப் பிசாசில்லை. கையிலே பந்தத்துடன் யாரோ ஒரு மனிதன் தான். அப்பப்பா, என்ன கரிய பயங்கர உருவம்!

ஆமாம், மனிதனுக்குக் கூச்சலிடும் முனியிடம் என்னவேலை? ஒருவேளை... அதுவும் மனிதன் தானு?

வெளிச்சம் மிக மிக நெருங்கி வருகின்றது. இதோ வந்துவிட்டது! திடீரென்று எங்கிருந்தோ ...இல்லை, ஆகாயத்திலிருந்து இன்னொரு உருவம், மிக மிகப் பயங்கர உருவம்... பந்தத்துடன் வரும் மனிதன் முன்னல்... 'தொம்!'

'ஹ... ஹ... ஹா! பயந்து விட்டாயா பைரவா?'

பேச்சுக்குரல். சந்தேகமே இல்லை, மனிதர்கள்தான். ஆனுலும் என்ன கொடூரமானவர்கள்.

'ஹ...ஹா! எனக்கா பாண்டியா பயம்? என்னைக் கண்டால் பயமே பயந்தோடிவிடுமே. மரத்திலிருந்து குதித்தா என்னைப் பயமுறுத்துகிருய்?'

'ஹா!...ஹா!...ஹா...' காடே அதிரும்படி இருவரும் உரக்கச் சிரிக்கின்றனர்.

'பாண்டியா, இப்பொழுது தான் அவனைச் சந்தித்தேன்.'


'யாரை, நரேந்திரனையா?'

'ஆமாம். அவன் வீட்டின் முன்னுலேயே பார்த்தேன். ஒரே வீச்சில் அவன் தலையைச் சீவி எறிந்திருப்பேன். அதற்குள் உன் வளர்ப்பு மகள் மாலதி வந்துவிட்டாள்.'

---

**ஆசிரியர்:** ஒரு தலைவரின் கடமை என்ன?

**மாணவன்:** தலைமறைவாக இருந்துவிட்டுத் தேர்தல் காலத்தில் தலை காட்டுவது சார். ☐



மானேஜர்: இதென்ன, ராஜினாமாக் கடிதமாயிருக்கே!... அது சரி, கடைசியில் கையொப்பம் வைக்கவில்லையே...?

தொழிலாளி: அது சார்... உங்க கையொப்பம் தான் நல்லது என்று எல்லோரும் சொன்னாங்க!

மானேஜர்: ...? ...? ...?

—விஸ்வநாதன் - தாமோதரம்பிள்ளை.

'முட்டாள்! காரியத்தைக் கெடுக்கப்பார்த்தாயே. கடிதத்தை வீசிவிட்டு வாடா என்றால் தலையைச் சீவிவிட்டு வந்திருப்பேன் என்கிறாயே.'

'இல்லை பாண்டியா, கடிதத்தை அவன் காலடியிலேயே வீசிவிட்டு வந்திருக்கிறேன். அதுவும் உன் மாலதியே அதை எடுத்து அவன் கையிலே கொடுத்ததை என் கண்ணாலே பார்த்துவிட்டுத்தான் வந்தேன்.'

'பலே பைரவா! மாலதி கெட்டிக்காரி. என் சர்வசக்தி ஆயுதம், அணுகுண்டை விடப் பயங்கரமான அப் பெண்ணாயுதம் தன் இறுதி மூச்சே நெருங்கும் இக் கடைசி நேரத்திலும் சரியாகத்தான் வேலை செய்கின்றது.'

'என்ன பாண்டியா சொல்கிறாய்? யாரோ ஒரு அநாதையை எடுத்து எவ்வளவோ அன்பைக் கொட்டி வளர்த்தாயே, அந்த மாலதிக்குமா இறுதி நெருங்குகின்றது என்கிறாய்?'

'ஹ...ஹ...ஹா!' இது பாண்டியன் சிரிப்பல்ல. பயங்கர உறுமல்.

'பைரவா, அன்பைக்கூட விலை பேசித்தான் விற்பான் இந்தப் பாண்டியன். பிண்ணாக்கும் தவிடும் பிசைந்து பிசைந்து கொடுத்து பலியாட்டையும் அன்பைக் கொட்டித்தான் வளர்க்கின்றோம். முடிவு...? நான் சொல்வதை நன்றாகக் கேள் பைரவா. என் பழைய கூட்டாளி வீரபாகுவும் நானும் எவ்வளவோ காலங்களாகக் கொள்ளையடித்துச் சேகரித்த தங்கம் முழுவதையும் எனக்கும் தெரியாமல் எங்கோ ஒரு காட்டில் புதைத்து வைத்துவிட்டு அவ்விடத்திற்குரிய அடையாளப் படத்தை வரைந்து அப்படத்தை இரண்டாகக் கிழித்து மூத்த மகன் நரேந்திரனிடம் ஒரு பாதியையும் இளைய மகன் நரசிம்மனிடம் மறு பாதியையும் கொடுத்து, காலம் வரும் போது இருவரும் ஒன்று சேர்ந்து அத் தங்கத்தை எடுத்து, சரிபாதியாகப் பகிர்ந்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு இறந்து போனானல்லவா?'

'உண்மைதான் பாண்டியா. ஆனால் அந்தத் தங்கத்தைத்தான் நாங்கள் அடையப்போகின்றோமே. அதற்கும் மாலதியின் இறுதி நெருங்குவதற்கும் என்ன தொடர்பு?'

'மானுக்கும் அம்புக்கும் என்ன தொடர்பு என்று கேட்கிறாய்?'

'புரியவில்லையே.'

'முட்டாள். வேடன் குறித்த இலக்குப்படி அம்பு பாய்ந்து மானைக் கொல்கின்றது. அத்துடன் அம்பினுபயோகம் முடிந்துவிடுகிறது. அந்த அம்பை எடுத்து எறிந்துவிட்டு மானைத்தான் தூக்கிச் செல்கின்றான் வேடன். அதுபோலத்தான் மாலதியின் நிலையும். ஆரம்பத்தில் என் திட்டப்படி, நரேந்திரனுடனும் நரசிம்மனுடனும் மாலதியை மோதவிட்டுக் காதலை வளர்த்து இருவருக்குள்ளும் விரோதத்தை உண்டாக்கிப் பிரியச் செய்தேன். அதே விரோதத்தின் உச்சத்தில் இப்பொழுது என் இறுதித் திட்டப்படி மீண்டும் மாலதியையே கருவியாக்கி அவர்கள் இருவரிடமுமுள்ள புதையல் அடையாளப் படங்களையும் நானே அடைவதோடு அவர்கள் துப்பாக்கிகளாலேயே இருவரையும் ஒரே கணத்தில் எமலோகம் சேர்க்கவும் போகின்றேன். அந்தக் கணமே மாலதியின் உபயோகமும் முடிந்துவிடும். அவள் ஆவியும் பிரிந்துவிடும். ஆம். அதே விநாடியில் எங்கள் துப்பாக்கி,

மாலதியை அவர்களுக்குத் துணையாக அனுப்பவேண்டும். தங்கப் புதையல் எடுக்குமுன்பு நரபலி முக்கியம் பைரவா. அதுவும் ஆண் பலிகள் மட்டும் போதாது. பெண் பலியும் வேண்டும். நாளை அமாவாசை இரவு, நரேந்திரன் வீட்டில் இப்பெரு வேள்வி!'

'அது சரி பாண்டியா, ஆனுல் மாலதி உன் திட்டப்படி நடக்கத் தவறிவிட்டால்...?'

'பைத்தியக்காரா. பம்பரத்தை முடுக்குபவன் நான். விசை என்னிடம் இருக்கும் வரை முடுக்கி விட்ட பம்பரமாக அவள் ஆடித்தான் ஆகவேண்டும். ஏன், இப்பொழுது கூட அவள் தன் கடமையைச் செய்துகொண்டுதான் இருக்கின்ருள். நீ கவலையை விட்டு உன் அடுத்த கட்டத்தைத் தொடங்கு, போ!'

—□—

அதே வேளையில், நரசிம்மன் வீட்டில்...

'என்னுல் இதை நம்பவே முடியவில்லை மாலதி. தங்கம் முழுவதையும் தானே எடுப்பதற்காக என்னையே கொலை செய்ய என் தம்பியே திட்டமிடுகின்ருன் என்று யாரோ ஒரு 'உண்மை விளம்பி' எழுதியிருக்கின்ருனே, இதை எழுதியவன் உண்மையிலேயே ஒரு பைத்தியக்காரன் தான்.'

'எழுதியவனுக்குப் பைத்தியமில்லை நரேந்திரன். உங்களுக்கும் தான் பைத்தியம். முன்பொரு சாலத்தில் நானே நரசிம்மனுடன் சினேகமாகப் பழகியதும், அதை ஏதோ காதல் என்று நினைத்து என்னையே நீங்கள் சந்தேகித்ததும் உங்களுக்கு நினைவிருக்கும். அப்பொழுது ஒருமுறை அவன் என்ன சொன்னுன் தெரியுமா? 'மாலதி, எப்படியாவது நான் என் அண்ணனைக் கொன்றுவிட்டு அவனிடமிருக்கும் படத்தையும் கைப்பற்றி முழுத் தங்கத்தையும் எடுத்து உன் காலடியில் கொட்டுகின்றேன். அப்பொழுதாவது என்னை ஏற்றுக்கொள்வாயா?' என்ருன்.''

'சே! அப்படிப்பட்ட வஞ்சகனு அவன்? அவனை இப்பொழுதே கொன்று குவித்துவிட்டு முழுத் தங்கத்தையும் எடுத்து உன் காலடியில் நானே குவிக்கின்றேன்!'

'எனக்குத் தங்கம் பெரிதில்லை, நரேந்திரன் உங்கள் உயிர்தான் முக்கியம்.'

'உன் உள்ளம் எனக்குத் தெரியும் மாலதி. இருந்தாலும் என் தங்கம்...'

'அதற்கு? நரசிம்மனைக் கொன்றவுடன் படம் கைக்குக் கிடைத்துவிடுமா?'

'அப்படியென்ருல் என்னதான் செய்வது?'

'நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களுக்குத் தம்பியின் மேல் திடீரென்று அளவுகடந்த பாசம் ஏற்பட்டுவிட்டதாயும் அதனுல் நீங்கள் ஒரு பங்கை வைத்துக்கொண்டு தம்பிக்கு இரண்டு பங்கைக் கொடுக்க விரும்புவதாயும் நாளை இரவே படத்துடன் தயாராக வருமாறு பணித்ததாகவும் நான் அவனிடம் கூறுகின்றேன்.'

'அதை அவன் நம்புவானு?

'அவனை நம்பவைத்து நாளை இரவு படத்துடன் இங்கு வரச் செய்வது என் பொறுப்பு. அதற்குமேல்...'

'என் துப்பாக்கியின் பொறுப்பு!' 'ஆம். அவனிடம் இருக்கும் படம் என் கைக்கு வந்த மறு விநாடி... என் துப்பாக்கி வேட்டு உலகமெலாம் கேட்கும்!'

'இன்னெரு விசயம் நரேந்திரன், அவன் வந்தவுடன் அவனை நம்பச் செய்வதற்காக உங்கள் படத்தைக் காட்டவேண்டும். ஆனுலும் உண்மையான படத்தைக் காட்டுவது ஆபத்து. உங்கள் படத்தை எடுத்துவாருங்கள்.


## சிரித்திரன் சந்தா விண்ணப்பப் பத்திரம்

பெயர்: ————————————————

விலாசம்: ————————————————


————————————————

1 வருட சந்தாப் பணமாக ரூபா 6/-
6 மாதச் சந்தாப் பணமாக ரூபா 3/-

இத்துடன் அனுப்புகிறேன். ஏற்றுக்கொண்டு ———— மாதம் தொடக்கம் சிரித்திரனை அனுப்பிவைக்கவும்.

——————  ——————————
திகதி  கையொப்பம்

[பணத்தைப் போஸ்டல் ஓடராக, மனேஜர் சிரித்திரன், 101/4 சென். பெனடிக்ஸ் வீதி, கொட்டாஞ்சேனை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.]



**ஒருவர்:** நீங்கள் தேர்தலில் நிற்பதாகக் கேள்வி...

**மற்றவர்:** தமிழ்க் காங்கிரசும் தமது அபேட்சகராகப் போட்டிபோடச் சொல்லிக் கேட்குது... தமிழரசுக் கட்சியும் கேட்குது. எந்தக் கட்சியில் நிற்பது என்று இன்னும் நான் தீர்மானிக்கவில்லை.

அதுபோல் நாமே ஒரு போலிப் படத்தை வரைந்து வைத்துக் கொண்டு உண்மையான படத்தை பின்புறமுள்ள தோட்டத்தில் ஒரு இடத்தில் ஆழப் புதைத்து வைப்போம். நரசிம்மனிடம் இருக்கும் படம் கைக்குக் கிடைத்ததும்...'

'பலே! பிரமாதமான திட்டம். இதோ இப்பொழுதே படத்தைக் கொண்டுவருகிறேன்.'

அவசர அவசரமாகக் காரியங்கள் நடைபெறுகின்றன. சிறிது நேரத்தில் அனைத்தையும் வெற்றிகரமாக முடித்துக்கொண்டு விடை பெறுகிறாள் மாலதி.

'நரேந்திரன், இப்பொழுது நாங்கள் படத்தைப் புதைத்திருக்கும் இடம் உங்களுக்கும் எனக்கும் தவிர இந்த உலகில் வேறு யாருக்கும் தெரியாது. தெரியவும் கூடாது.'

'பயப்படாதே மாலதி. உடலைக் கூறு போட்டாலும் உண்மை வெளிவராது. நீ போய் வா.'

நட்டநடுநிசியென்றும் பாராது நரேந்திரன் வீட்டைவிட்டு நடையைக் கட்டினாள் மாலதி.

'பாதித் திட்டம் பரிபூரண வெற்றி. இனி... மறுபாதி? ஆம், நரசிம்மன். இப்பொழுது அங்கும் 'அந்தக்' காரியம் நடந்து முடிந்திருக்கும். இதுதான் தக்க சமயம் என்று எண்ணியவாறு நரசிம்மன் வீட்டை நோக்கி நடந்தாள் அவள்.

—□—

நரசிம்மன் வீடு. இரவு இரண்டு மணியாகிவிட்டபோதிலும் தூக்கம் சிறிதுமின்றி கையில் பிடித்த ரிவால்வருடன் நடு ஹாலில் நடை பயின்றுகொண்டிருக்கின்றான் நரசிம்மன். அப்பொழுது...?

'டொக், டொக்... டொக்!' கதவு தட்டப்படும் ஓசை.

சிறிது தயங்கிய நரசிம்மன் ஓரளவு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு ஒரு கையினால் ரிவால்வரைக் கெட்டியாகப் பிடித்த வண்ணம் மறுகையினால் மெதுவாகக் கதவைத் திறந்தான்.

'யார், மாலதியா?'

பேச்சுமூச்சற்று நரசிம்மன் கைகளில் துவண்டாள் மாலதி. திகைத்து நின்ற நரசிம்மன் அவளை மெதுவாகத் தூக்கிச் சென்று ஒரு சோபாவில் கிடத்திவிட்டு முகத்தில் தண்ணீர் தெளித்தான். மயக்கம் நீங்கியவள் போல் கண்விழித்த மாலதி சிறிது நேர ஆசுவாசத்தின் பின் பேச்சை ஆரம்பித்தாள்.

'நரசிம்மன் நான் உங்களைக் காதலித்தே இருக்கக்கூடாது. எங்கள் உண்மையான காதலைப் புரிந்துகொள்ளும் சக்தி இந்த உலகத்திற்கு, ஏன் உங்கள் அண்ணனுக்கே கிடையாது.

'ஏன் மாலதி இப்படியெல்லாம் பேசுகிறாய்? அதுவும் இந்த நடு இரவில் எங்கிருந்து வருகிறாய்? எனக்கு எல்லாமே குழப்பமாக இருக்கே'

'நான் சொல்வதைக் கேளுங்கள். இன்று மாலை நான் இங்கு வரும்பொழுது வழியில் நரேந்திரனைச் சந்தித்தேன். என்னைக் கண்டதும் மிக அன்பாகப் பேசித் தன் வீட்டிற்கு ஒருமுறை வருமாறு வற்புறுத்தினான். நானும் உங்கள் அண்ணனாச்சே என்று மதிப்புக் கொடுத்து அவனுடன் சென்றேன். அங்கு சென்றதும் அந்தப் பாவி...'

'சொல் மாலதி.'

'அவன் என்னென்னவோ பிதற்றிவிட்டு, முடிவில் தன்னையே கல்யாணம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினான். நான் அதற்கு இணங்க மறுக்கவே ஒரு கத்தியைக் காட்டி என்னைப் பயமுறுத்தி ஒரு அறைக்குள் வைத்து அடைத்துவிட்டு, 'நரசிம்மனுக்கும் பாதிப் பங்கு தங்கம் கிடைக்குமென்ற எண்ணத்தினால்தானே என்னை உதறித் தள்ளுகிறாய். இப்பொழுதே நான் அவனை ஒழித்துக்கட்டிவிட்டு அவனுடைய படத்தையும் கைப்பற்றி முழுத் தங்கத்தையும் உன்

காலடியில் கொண்டுவந்து கொட்டுகிறேன். அப்பொழுதும் என்னை உதறித் தள்ளுவாயா பார்க்கலாம்!' என்று கூறிவிட்டு ஆவேசத்துடன் எங்கோ வெளியேறினான். உண்மையைச் சொல்லுங்கள் நரசிம்மன், உங்கள் தங்கத்தை விரும்பியா நான் உங்களைக் காதலிக்கிறேன்?'

உன் உள்ளம் எனக்குத் தெரியாதா மாலதி. அப்புறம்...?

'அப்புறம்... சற்று முன்புதான் திரும்பி வந்தான். என்ன நினைத்தானோ தெரியாது திடீரென்று கதவைத் திறந்துவிட்டு, 'உங்கள் வழியில் நான் குறுக்கிடமாட்டேன். நாளையே நரசிம்மனைப் படத்துடன் வரச்சொல்லு. என்னுடைய படத்தையும் தருகிறேன். நீயே முன்னின்று தங்கத்தை எடுத்துச் சமமாகப் பகிர்ந்து உங்கள் பங்கை எடுத்துக் கொண்டு போங்கள்' என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டான். அங்கிருந்து நேராக இங்கே வருகின்றேன்.''

'இப்பொழுதுதான் எனக்கு எல்லாம் புரிகின்றது மாலதி. இதோ... இதைப் பார்த்தாயா?' என்று கூறியபடி அருகே மேசை ஒன்றின்மேலிருந்த ஒரு கத்தியை எடுத்து மாலதியிடம் காட்டினான் நரசிம்மன்.

'கத்தியா? இதை எங்கோ பார்த்த... ஆம், இந்தக் கத்தியைக் காட்டித்தான் நரேந்திரன் என்னைப் பயமுறுத்தினான்'

'அதுமட்டுமில்லை மாலதி. அதே கத்தியைத்தான் மறைந்திருந்து என்மீது வீசிவிட்டும் ஓடியிருக்கின்றான். நல்லவேளையாக நான் தப்பினேன்.'

'ஐயோ தெய்வமே! தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். எனக்கு உங்கள் உயிர்தான் முக்கியம். பேசாமல்

> உங்கள் 'இண்டிக்கேட்' 'சிண்டிக்கேட்' சண்டையினால் இந்தியாவின் நிலையை 'டெலிகேட்'டுக்கு ஆளாக்கி விடாதீர்கள்.
>
> —முதலமைச்சர் மு. கருணாநிதி.

தங்கம் முழுவதையும் அந்தப் பாவியிடமே கொடுத்துவிட்டு நாங்கள் எங்கேயாவது போய் வாழுவோம்' என்று பதறியபடி கூறினாள் மாலதி.

'பைத்தியக்காரி. என்னைக் கொலை செய்யவே துணிந்த அந்தக் கயவனுக்கு முழுத் தங்கத்தையும் கொடுத்துவிட்டு ஓட நான் கோழையா என்ன? அவன் குறிப்பிட்டபடி என் படத்தையும் கொண்டு நாளை அவன் வீட்டிற்கு உன்னுடன் போகத்தான் போகிறேன். அவன் படம் உன் கைக்குக் கிடைத்த மறுவிநாடி அவனை எமலோகத்திற்கு அனுப்பிவைக்கின்றேன்!'

'ம்... நீங்கள் முடிவு செய்துவிட்டால் அதை மாற்ற முடியுமா என்ன. இருந்தாலும் ஒன்று சொல்கின்றேன். ஏதோ ஒரு கெட்ட எண்ணத்துடன் தான் நரேந்திரன் எங்களை வரச் சொல்லியிருப்பான் என்று நினைக்கின்றேன். எதிர்பாராத விதமாக ஒருவேளை அவன் எங்களைக் கொன்றுவிட்டால் எங்கள் படம் அவன் கைக்குக் கிடைத்துவிடும்.'

'அதுவும் உண்மைதான்.'

'அதனால்தான் நான் சொல்கிறேன், உங்கள் படத்தை எடுத்துவாருங்கள். அதுபோல ஒரு போலிப் படத்தை நாமே தயாரித்துக்கொண்டு உண்மையான படத்தைப் பின்புறமுள்ள தோட்டத்தில் ஒரு இடத்தில் ஆழப் புதைத்துவைப்போம். நாளை நரேந்திரன் வீட்டிற்குப் போலிப் படத்தையே கொண்டு செல்வோம்.'

'அருமையான திட்டம் மாலதி. இதோ, இப்பொழுதே படத்தைக் கொண்டுவருகின்றேன்.'

காரியங்கள் துரித கதியில் நடைபெறுகின்றன. சிறிது நேரத்தில் அனைத்தையும் வெற்றிகரமாக முடித்துக்கொண்டு விடைபெறுகிறாள் மாலதி.

'நரசிம்மன், நன்றாக ஞாபகமிருக்கட்டும். நாளை நரேந்திரனுடைய படம் என் கைக்குக் கிடைத்த மறுவிநாடி...'

'என் துப்பாக்கி சீறும்!'

'இன்னொரு விசயம் நரசிம்மன். இப்பொழுது நாங்கள் படத்தைப் புதைத்திருக்கும் இடம் உங்களுக்கும் எனக்கும் தவிர இந்த உலகில் வேறு யாருக்கும் தெரியாது. தெரியவும் கூடாது!'

'என்னைக் கசக்கிப் பிழிந்தாலும் உண்மை மட்டும் வெளிவராது மாலதி. நீ பயப்படாமல் போ. நாளை இரவு தயாராக வந்து சேர்.'

மாலதி வெளியேறுகிறாள்.

அவள் மனதில் ஆயிரம் எண்ணங்கள்.

'நரேந்திரன், நரசிம்மன் இருவரின் வாழ்வும் நாளை அவர்கள் கைகளாலேயே முடிந்துவிடும். அதன் பின், உண்மையான படங்கள் இருக்குமிடம் என் ஒருத்திக்குமட்டுமே தெரியும்.

பாவம் பாண்டியன்! என்னைப் பகடையாக்கி வெற்றி காண விழைகின்றான். அவனுக்குக் கிடைக்கப்போவது வெறும்

போலி. முடிவில்... எல்லாம் எனக்கே சொந்தம்!'

தொடர்ந்து நடந்தாள் மாலதி

—□—

மறு நாள். அமாவாசை இரவு. நடு ஜாம நேரம்.

நரேந்திரன் வீட்டில் நரேந்திரனும் நரசிம்மனும் எதிரெதிரே நிற்கின்றனர். இருவர் கைகளிலும் இரு கடதாசிச் சுருள்கள். இருவருக்கும் நடுவே போடப்பட்டிருந்த ஒரு சிறிய மேசையினருகே மாலதி தனியே நிற்கிறாள்..

அதே நேரம், வெளியே... இருளோடு இருளாக இரு கரிய உருவங்கள் உள்ளே நடப்பவற்றை யன்னலூடாக உற்றுக் கவனித்தவண்ணம் இருக்கின்றன. இருவர் கைகளிலும் இரு துப்பாக்கிகள்.

ஒரே நேரத்தில் நரேந்திரனும் நரசிம்மனும் மேசையினருகே மெதுவாக நடந்துவந்து தங்கள் படச் சுருள்களை மேசைமேல் வைத்துவிட்டுத் திரும்பவும் பழைய இடங்களில் போய் நிற்கின்றனர். இருவர் கைகளும் தத்தம் சட்டைப் பைகளுள் புகுந்து எதையோ கெட்டியாகப் பிடித்த வண்ணம் தயாராக இருக்கின்றன.

அதே வேளை ஜன்னலினூடாக இரு துப்பாக்கிகள் மாலதியை நோக்கி யாருமறியா வண்ணம் குறி பார்க்கின்றன.


மேசையின் அருகே நின்ற மாலதி அச் சுருள்களையே உற்றுப் பார்த்தவண்ணம் நிற்கிறாள். விநாடிகள் மெல்ல நகர்கின்றன.

ஒன்று... இரண்டு... மூன்று...

மெதுவாக நடுங்கும் கைகளை மெல்ல நீட்டிய மாலதி இரு சுருள்களையும் ஒன்றாக எடுத்து கண்களை மூடியவண்ணம் நெஞ்சோடு நெஞ்சாக அணைத்துக்...

[முடிவு...?...அடுத்த இதழில்.]

# ஒய்யப்பங்கங்காணியாரும் மிஸிஸ். டாமோடிரனும்!



— குறிஞ்சிதாசன் —

பிரஜா உரிமை விடயமாக பட்டணத்துக்கு வந்த ஒய்யப்பங் கங்காணியார் பல தெருக்களைச் சுற்றி அலைந்துவிட்டு கறுவாக் காட்டு (கொழும்பு-7) வீதிகளில் நடந்து கொண்டிருக்கிறார். ஒரே தாகம்! தண்ணீர் கேட்டுக் குடிக்கலாமென்ற நோக்கோடு ஒரு பெரிய வீட்டு இரும்புக் கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே போகிறார். பெயர்ப் பலகை தெரிகிறது. 'மிஸிஸ். டாமோடிரன்' அது யாரோ எவரோ என்று கவலைப் படாமலே வீட்டுக்குள் போகிறார்.

நல்ல வேளை எல்சேசன் நாய் கட்டப் பட்டிருந்தது. பியானோ வாசித்துக் கொண்டிருந்த மிஸிஸ். டாமோடிரன் திரும்பிப் பார்க்கின்றாள். ஒருவரையொருவர் உற்றுப் பார்க்கின்றனர். இருவருக்குமே திகைப்பு! ஒருவரை ஒருவர் இதற்கு முன் எங்கோ கண்டிருக்கின்றனர். அது எங்கே? எங்கே...?...அது...

சிரிப்பும் சிந்தனையும் சங்கமிக்கும் இடம், கண்ணீரும் புன்னகையும் கலந்து வருமிடம், பாட்டாளிகளும் பூர்ஷ்வாக்களும் கை கோர்த்து நடமாடும் இடம், ஹரிஜனங்களும் அர்ச்சகர்களும் ஆரத் தழுவுமிடம் ...

சிவஞான தீவின்- 'சிரித்திர புரம்'.

ஆமாம்; இங்கு தான் ஒய்யப்பங் கங்காணியாரும் மிஸிஸ். டாமோடிரனும் ஒருவரையொருவர் கண்டிருக்கிறார்கள். ஆனால்

இன்றுதான் கதைக்கச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. மாமூலான சுகசேம விசாரிப்புகளுக்கு பிறகு அவர்கள் கதைக்கிறுர்கள். ஓ... இன்னும் கதைத்துக் கொண்டுதானிருக்கிறுர்கள்.

**மிஸிஸ்.டா:** ஒய்யாப்பாங்காங் கணி, வை டோன்ட் யூ சிட்...? டேக் ஏ சீட் ... டேக் ஏ சீட் ... !

**ஒய்யப்பங்:** சீட்டாவது கீட்டாவது நீயேம்மா 'லவாலவா'ங்குற அதான் ஒவ்வொருத்தனேயும் சீட்ட கிழிச்சி இந்தியாவுக்கு அனுப்பிபுடுரானுகளே!

**மிஸிஸ்.:** இந்தியாவுக்கு உங்கள்ட ஆக்கள் எல்லாரும் பெமலியோட டுவர் போறீங்களா?

**ஒய்:** பெமலியாவது கிமலியாவது போறவனுக்கு போத்திக்கிறதுக்கு ஒரு கம்பளியாவது குடுக்கிருனுக இல்லிங்கம்மா ஐயையோ ... இதென்னும்மா கூத்தாயிருக்கு... ஓங்கட ரவுக் கையிலே கையில்லீங்களே ...

**மிஸிஸ்.:** யூ சீ மிஸ்டர். ஒய்யப்பாங்! திஸ் இஸ் ஏ 'ரவிக்'

**ஒய்.:** ராசா வூட்டு நாயி சிம்மாசனத்துல ஏறிச்சீன்னு வண்ணுனூட்டு நாயி வெள்ளாவி பாணயில ஏறுன கணக்கா நம்ம குஞ்சி பொரி சங்கப்புள்ள ஊட்டு சின்ன மகனுக்குக்கோட ரவியோ இல்ல 'ரவிக்'கோன்னு தானுங்க பேரு வச்சிருக்காங்க... அவன ஒங்களுக்கு தெரியுமாங்க?

**மிஸிஸ்.:** வட் ஆர் யூ டோக்கிங்?

**ஓ.க.:** என்ன சொன்னீக? டோக்குங்களா? நம்ம பெரிய தொர கிட்ட கோட டோக் இருக்குதூங்க. சுட்டு புடுவாரு சுட்டு...; அப்புடி தானுங்க முந்தியொரு நாளு லின்டுலா நாகசேனேதோட்டத்துல தலைவரு அம்மாவாசியஸ்டைக்கு போடுறப்போ சுடப் போயிட்டாருங்க...!

**மிஸிஸ்.:** வட் ஸ்ரைக்? வை...?

**ஓ.க.:** வட்டு ஸ்ரைக் இல்லீங்க. இது தோட்டத்து ஸ்ரைக்குங்க! ஒரு தரம் பெரிய கொத்த மல்லி கிருஷ்ணன் குடும்பத்துக்கு வேல நிப்பாட்டி புட்டானுங்க. அதுனுல தானுங்க ஸ்ரைக்போட்டானுக.

**மிஸிஸ்.:** வேல நிப்பாட்டி அப்பிடேன்ரு, ஒலிடே...! லீவ்...! கௌநைஸ்...! அப்ப கொகனட் குரோவுக்கு போய் ஒலிடே நைட் என்ஜோய் பிண்ணியிருக்கலாமே!

**ஓ.க.:** என்ஜோயாவது பஞ்சோயாவது... ஐஞ்சதமில்லாமே அவனூட்டு குடும்பம் அந்தரிச்சி பட்டினி கெடந்திச்சீங்க...

**மிஸிஸ்.:** பட்டிணி ஓ...தட் இஸ் குட்...! நானும் அப்படி தான் பட்டிணி இருப்பேன் என்ட எபிடயட்ட எஜஸ் பண்ண...

**ஓ.க.:** நீங்க எந்த பட்டிய பத்தியோ சொல்றீங்கம்மா... நானு சொல்றதுங்க வேலேயில்லாமே... இதுனுல கூலியில்லாமே அவுக திங்க இல்லாமே குடும்பமா பட்டினி கெடந்தத சொல்றேனுங்க.

**மிஸிஸ்.:** தின்ன இல்லாமே......? வை? குக் பண்ணியிருக்கலாமே!

**ஓ.க.:** குக்காவது கொக்காவது.? வூட்டுல அடுப்பு பத்துரு தானுங்களே?

**மிஸிஸ்.:** ஏன் குக்கர் ரெப்பியரா?

**ஓ.க.:** அட நீயென்னும்மா ... பெரிய ரோதனேயா போயிறிச்சி. ஒன்னேட ... வூட்ல திங்க ஒன்னுமில்ல பட்டினி கிடந்தாங்க. அம்புட்டுத்தான் ஆள வுடம்மா...

**மிஸிஸ்.:** வீட்டில தின்ன ஒன்னுமில்லாட்டி 'பவுன்டன் கபே'ல்ல மீல்ஸ் ஒடர் பண்ணி எடுத்திருக்கலாமே?

**ஓ.க.:** ஐயய்யோ... இதென்னிது... இந்த பொம்மனுட்டியோட நமக்கு பெரிய ரோதனேயாக் கெடக்கு...?

**மிஸீஸ்.:** வட் யூ மீன்...?

**ஓ.க.:** மீன் இல்லீங்க கருவாடு...

**மிஸிஸ்.:** ஓ யேஸ் நானிருக்கிறது கருவாகாடு தான்... கலம்பு செவன். பை த வே, மிஸ்டர் ஒய்யாப்பங், ஹவ் எபவுட் அன் ஐஸ்ட் கொபீ?

**ஓ.க:** வேண்டாமுங்க என்ட பேரன்கிட்ட கணக்கு கொப்பி இருக்குதூங்க...

**மிஸி:** வட் நொன்சன்ஸ்..குடிக்க ஐஸ் கொபீ...?

**ஓ.க;** சின்ன புள்ளேங்க தானுங்க ஐசுபழமுனு எதையோ வச்சிசூப்புங்க. நமக்கு அதெல்லாம் எதுக்குங்க கட்டயில போற வயசில... ஜில்லுனு மோரு ஒரு கிளாஸ் குடுத்தீங்கனு குலு குலூன்னு இருக்குமுங்க...

**மிஸி:** ஐ ஆம் சொரி... எங்ககிட்ட மோரு இல்லே, ஸால் ஐ கேட் யூ யோக்கட்?

**ஓ.க:** யேம்மா இங்கிலீசுல பேசியே என்ட மூலய கலக்குற?

**மிஸி:** ஓ...ரெண்டு மணி... இன்னேக்கு லேடீஸ் கிளப் கொண்பரன்சுக்குப் போகனும்.

**ஓ.க:** அப்ப சரீங்க நானும் நம்ம வேலய முடிச்சிகிட்டு ரெண்டொரு நாள்ள தோட்டத்துக்குப் போவனும் கொந்தராப்ப கவனிக்க... அப்ப நானு போயிட்டு வாரேனுங்க...

**மிஸி:** வெரி வெல்... ஒய்யாப்பாங்கங்கானி குட் பை!

**ஓ.க:** வேண்டாமுங்க எனக்கிட்ட வெத்தலபை இருக்குதுங்க.




# கால காண்டம்

**— வரணியூரான் —**

காலம் மாறத்தான் வேண்டும். கால மாற்றத்திற்கேற்ப நம்மையும் நாம் மாற்றத்தான் வேண்டும். இதை யாரும் மறுக்க முடியாது. நடந்து போன மனிதன், மாட்டு வண்டியையும் குதிரை வண்டியையும் கண்டதும் நடையைக் குறைக்கவில்லையா? படிப்படியாக முன்னேறி, இன்று ரொக்கட்டில் சந்திர மண்டலத்துக்கே போய் வந்த பின்னும் நடந்தும், மாட்டுவண்டியிலும் பிரயாணம் செய்யும் மனிதன் முட்டாளல்லவே!

காலம் வேகமாக மாறும் போது மனிதனின் ஆயுள் குறைகின்றது. எதிலும் மனிதன் வேகத்தைத்தான் விரும்புகிறான். ஏனெனில் அவனது வாழ் நாட்கள் குறைவு. அதற்குள் அனுபவிக்கவேண்டியதை அனுபவித்துவிடவேண்டுமென ஆசைப் படுவதில் தப்பில்லையே.

பனிகாலத்துக்கு 'மினி' உடை ஒவ்வாதுதான் என்றாலும்; மினிகாலத்தில் பனி ஒன்றும் செய்யாது. அதைப்பற்றி எங்களுக்குக் கவலையும் இல்லை. நான் சொல்லவேண்டுமென விரும்பியது மினிகாலத்தைப்பற்றியேயன்றி மினி உடையைப் பற்றியல்ல. இது என்னுடைய அனுபவம்.

என்னுடைய தூரத்துச் சொந்தக்கார வீடொன்றுக்குப் போகவேண்டியிருந்தது. எனக்கும் அந்தக் குடும்பத்தினருக்கும் சிறு தகராறும் பல காலமாக இருந்துவந்ததுதான். ஆனால் அது அவ்வளவு பாரதூரமான விளைவுக்குக் காரணமாக இருக்காது. முள்ளை முள்ளால் எடுக்கவேண்டுமென்பர். அதுபோல் ஒரு கல்யாண விஷயத்தால் எம்மிடையே ஏற்பட்ட மனஸ்தாபத்தை இன்னொரு கல்யாண விஷயத்தால் போக்கிவிடவேண்டுமென்பது எனது திட்டம். இப்படியே நான் சுற்றி வளைத்துக்கொண்டு போனால் உங்களுக்குப் 'போர்' அடிக்கும், நான் நேரே விஷயத்துக்கே வருகிறேன்

தயங்கித் தயங்கி ஒருவாறு வீடு போய்ச் சேர்ந்தேன். முன் விருந்தையில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டேன். வீட்டில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. சிறிது நேரந்தான் இருந்திருப்பேன். வீட்டின் தலைவர் — அதுதான் என் விரோதியான என் மைத்துனர் — வந்தார். என்னைக் கண்டதும் காணாதது போல மிகவும் அவசரமாக வீட்டுக்குள்ளே சென்றார். 'மங்கா! மங்கா!' (இது மங்கையர்க்கரசியின் மினியாக்கம்) என்று மனைவியைக் கூப்பிட்டு, 'கிறிஸ் எங்கே... கிறிஸ் எங்கே?' என்றார். என் இரத்தம் உறைந்து விடும் போலிருந்தது. இன்னும் என் மேலிருந்த வெறுப்புப் போகவில்லைப் போலும். கை கால்கள் பட படவெனத் தாளம் போடத் தொடங்கிவிட்டன. எழுந்தோடி வந்து விடுவோமா என்றால் கால்கள் நகர மறுத்தன.

ஒரு வழியாக வருவது வரட்டுமென்று காத்திருந்தேன். மங்கா மலர்ந்த முகத்துடன் தேனீர் கொண்டு வந்தாள். ஒருவாறு நான் என்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டேன். புன்னகையை வரவழைத்துக் கொண்டு தேனீரை வாங்கக் கையை நீட்டும் நேரம் அந்தப்பாவி பின்னால் வந்தபடி 'ஏய் மங்கா! உன்னை ஆர் தேனீர் கொடுக்கச் சொன்னது. கிறிஸ் வரட்டும் பொறு' என்றாரோ இல்லையோ எனக்குக் கண்கள் இருளத் தொடங்கிவிட்டன. இன்று நான் யார் முகத்தில் விழித்தேன்? மயக்கம் போட்டு நான் விழுவதற்கிடையில் கையில் ஒரு அரைப் போத்தல் கல்லோயாவுடன் 'கிறிஸ்' என்ற கிருஷ்ணசாமி வந்து விட்டான்.

பிறகு நடந்தது ஏன் உங்களுக்கு...?



பேச்சாளர்: தம்பு! பார்த்தியா இன்றைய புதினத்தை! நேற்றைய என் கூட்டத்தைப் பற்றி ரொம்ப வந்திருக்கு.
நண்பர்: அப்போ அப்தக் கல்லெறி விஷயம் வெளிவரலையோ?
பேச்சாளர்: அடடா... நான் அதைப் பார்க்கவில்லையே ... அது தானே தலையங்கம் ...!

—விஸ்வநாதன்- தாமோதரம்பிள்ளை.

# ஆச்சி பயணம் போகிறாள்

—செங்கை ஆழியான்—

## 12

ஆறு மணிக்கு ஒருவிதமாகக் கண்டி ரெயில் புறப்பட்டது ஆடி அசைந்து. பெருமூச்சு விட்டபடி நகர்ந்தது. 'மெயில் பிரயாணத்திற்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்' என்று எண்ணிக் கொண்டான், சிவராசா.

'இதென்ன சிற்றுக்கள். இருக்கவும் முடியாமல்...' என்றாள் ஆச்சி.



'இது கரிக்கோச்சி, மாமி! உப்பிடித் தான் இருக்கும் பழைய டச்சுக் காலத்தின் பெட்டியள்...' என்றாள், செல்வி.

'டச்சுக்காரர் இப்பவும் ஆளா கினமே?...'

சிவராசா சிரித்தான்.

'அவை போன இடம் தெரியாது... மாமி!'

காலை மலர்ந்து கொண்டிருந்தது. பொல்காவலையிலிருந்து கண்டிக்கு ரெயிலில் போனால், வழியில் காண்கின்ற காட்சிகள் உண்மையில் அற்புதமானவையே பசுமை மாறாத தாவரப் போர்வையையும், அதள பாதாளத்தில் தாழ்ந்து கிடக்கும் நெல் வயல்களையும் நாள் முழுவதும் பார்த்துக்கொண்டே இருக்கலாம். சுழித்துப்பாயும் அருவிகள் வானத்தை முட்டும் மலைத் தொடர்கள். ஆங்காங்கே வீடுகள் கட்டி வாழும் மக்கள்.

ஆச்சி இவ்வளவற்றையும் பார்த்து அதிசயித்தாள்!

பொல்காவலையில் இருந்து கண்டிக்குப் போகும் போது இருப்புப் பாதைக்கு வலது பக்கத்து ஓரமாகப் பாயும் நதி மகா ஓயாவாகும். குறிப்பிடத்தக்க அகலத்தில், இடையிடையே மணல் திட்டுகளை மேவவிட்டு இந்நதி பாய்கின்றது. நீர்கொழும்புக்கு வடக்கே பொலவத்தை எனுமிடத்தில் மகாஓயா சமுத்திர ராசனைத் தன்னுடன் கலக்க விடுகின்றது.

இளம் காலை வேளை அது. ஆச்சி மகா ஓயாவை றெயிலில் இருந்தபடியே பார்த்தாள்.

'இது என்ன குளம்?' எனக் கேட்டாள்.

'இது, குளமில்லை ஆச்சி! நதி...ஆறு...' என்று விளக்கினான், சிவராசா.

'இதுதான் ஆறோ...' ஆச்சியின் குரலில் வியப்பு. முதன் முதலாக இன்றுதான் அவள் ஒரு நதியைப் பார்க்கிறாள். றெயில் போகப்போக அந்நதியின் வளைந்து நெளிந்து ஓடும் தன்மை அவளுக்குப் புலனாகின்றது.

'இவ்வளவு நீரை இது எங்கை பெறுகுது?'

'மலை நாட்டில் மழை அதிகம், ஆச்சி. பெய்கின்ற மழை நீர் முழுவதும் பல சிறு அருவிகளாகப் பாய்ந்து பெருநதியுடன் இணைகின்றன. அந்நீரை எல்லாம் இந் நதி அள்ளிக்கொண்டு போய்க் கடலுடன் கலக்கின்றது...'

'எங்கடை பக்கத்திலை நீரில்லாமல் எவ்வளவு கஷ்டப்படுகினம். இப்படி ஒரு ஆறிருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும்.'

### விளம்பர ரசம்

உங்கள் தெய்வத் தாய் தந்தை, கற்பு மனைவி, தவக் குழந்தைகள் எல்லோருடனும் பார்த்து மகிழ வேண்டிய படம். கொலை களவு, காதல் களியாட்டம் எல்லாம் நிறைந்த தீந்தமிழ்த் திரைத் தித்திப்பு. பார்க்கத் தவறாதீர்கள்!

—ஜோக்கிரடீஸ்

## சங்கிலித் தேவன்

றெயில்கார்ட்:- ஏன் சங்கிலியை இழுத்தாய்?

திருடன்:- மன்னிக்கணும் சார்! பழக்க தோஷத்திலே செய்திட்டன்.

'ஏன் யாழ்ப்பாணத்திலும் ஆறு இருக்குத்தானே? தொண்டைமானாறு, வழுக்கியாறு...' என்று குறுகிட்டாள், செல்வி.

சிவராசா நகைத்தான்.

'மக்கு...' என்றுன்.

செல்வி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'தொண்டைமானுறு உப்புக் கடனீரேரி...வழுக்கியாறு மழை காலத்திலே வெள்ளம் ஓடுகிற வாய்க்கால்...' என்று விளக்கினுன், சிவராசா.

றெயில் விரைந்து கொண்டிருந்தது. ஆச்சி வெளியே கண்களை நழுவவிட்டாள்.

செல்விக்கு தூக்கம் கண்களை விட்டு நீங்கவில்லை.

இருந்தாற்போல றெயிலுக்குள் இருள் பரவியது.

'உதென்னடா, இருந்தாற் போல இருளுது...' என வெருண்டு போய்க் கேட்டாள், ஆச்சி.

சற்று நேரத்தின் பின் ஒளி பரவியது.

'மலைப்பாதையணை... மலைகள் குறுக்கிட்டாதல்,அவற்றைக் குடைந்து குகையுண்டாக்கி, அதனூடே றெயிலைப் போகவிட்டிருக்கினம். குகைக்குள்ளாலை போகேக்கைதான் இப்பிடி இருட்டு...இப்பிடி கன குகைகள் இனி வரும், ஆச்சி'

ஆச்சியின் விழிகளில் வியப்பு

'மலையை எப்படியடா, குடைந்தாங்கள்?'

'சந்திரனுக்குப் போகப் போகிருங்கள்... உது பெரிய வேலையே?'

'எங்கடை ஆக்கள் கெட்டிக்காரர்தான்'

'எங்கடை ஆக்கள் அமைத்தவையே? இங்கிலீஸ்காரன் அமைச்சதணை...'

'ஏன் அவன் அமைச்சவன்'

'கண்டியைக் கைப்பற்றித் தனது ஆதிக்கத்தின் கீழ் வைச்சிருக்க நல்ல போக்குவரத்துத் தேவையாக இருந்தது. மலை நாட்டிலே உற்பத்தியாகின்ற கோப்பி, தேயிலை, றப்பர் என் பனவற்றைத் துறை முகத்திற்குக் கொண்டு செல்லவும் தேவையா இருந்தது... றெயில் பாதையை மலையைக் குடைந்து அமைத்தான்...'




**சீனுக்காரனும் கெட்டித் தனம் காட்டுறுன்**


பகலிரவாய்ப் பாடுபடும் பாட்டாளி, பாங்குடனே பணம் சேர்க்கும் முதலாளி
இவர்கள் யாவரும் விரும்பிப் புகைப்பது காரம், மணம், குணம் நிறைந்த

**கமலா பீடியே!**

முப்பது வருடங்களுக்கு மேலாக இந்தியாவிலும், இலங்கையிலும் இணையற்றதெனப் புகழ் பெற்றது

தயாரிப்பாளர்கள்:
**கமலா ஸ்டோர்ஸ்**
பொன்னம்பலம் பில்டிங்ஸ்,
176, சென்ரல் வீதி, கொழும்பு.



# நாலுபேரைக் கேட்டோம்

——ஃ——ஃ——

பிரச்சனைகள் இல்லாத சமுதாயம் எங்கேயப்பா இருக்கின்றது? ஒவ்வொரு பிரச்சனையிலும் எல்லோர் கருத்தும் ஒன்றாக இருக்கின்றதா, என்றால் அதுவும் இல்லை. ஆயிரம் பிரச்சனைகள் ஆயிரம் கருத்துக்கள். இடையிலே இனம், மொழி, கலை எல்லாமே ஊசலாடுகின்றன.

"நாலு பேரைக் கேட்டோம்" பகுதியில் நாம் மாதாந்தம் ஒரு பிரச்சனையைக் கேட்கிறோம். உங்கள் கருத்துக்களைச் சுருக்கமாக எழுதி அனுப்புங்கள். நல்ல கருத்துக்கள் நான்கைப் பிரசுரிப்போம்.

ஒரு வார்த்தை!

இது உங்கள் பகுதி, உங்கள் பத்திரிகை.

நல்ல கருத்துக்களைச் சொல்லுவதில் நாம் ஏன் தயங்கவேண்டும்?

இதோ கேள்வி—

## தமிழினம் ஒதுக்கப்படுகின்றதா ?

அனுப்பவேண்டிய

முகவரி:

"நாலு பேரைக் கேட்டோம்"
சிரித்திரன்
101/4, சென் பெனடிக் மாவத்த,
கொழும்பு-13.

'கெட்டிக்காரர்தான்...'

'இங்கிலிஸ்காரன்ரை கெட்டித்தனமெல்லாம் கதையாப் போச்சுது, ஆச்சி! இப்ப அமெரிக்கரும் ரஸ்யாக்காரரும்தான் கெட்டிச்காரராக இருக்கினம்... சீனக்காரனும் கெட்டித்தனம் காட்டுறன்...'

செல்வி சிவராசாவைப்பார்த்து முறைத்தாள்.

'சீன என்றால் ஏனோ உங்களுக்குப் பிடிக்காது...'

'சீனவெடியள் செய்யிறவன்கள் தானே'? என்றாள் ஆச்சி.

றெயில் மீண்டும் ஒரு குகையுள் புகுந்து ஓடியது. ஒளிபரவ வெகுநேரமெடுத்தது. ஒளிபரவியபோது செல்வி வெட்கத்தோடு சிரித்தாள்.



(காவாலி)

'காவாலி...' என அவள் உதடுகள் செல்லமாக முணுமுணுத்தன.

'கால் வலிக்குதோ பிள்ளை' என்று கேட்டாள் ஆச்சி.

## 13

நம்புக்கனையில் வந்து நின்ற றெயில் புறப்பட வெகு நேரம் எடுத்தது.

'என்ன பிள்ளை புறப்படாது போல இருக்குது...' என்றாள் ஆச்சி.

'இந்த றெயில் நின்று நின்று மெதுவாகத்தான் போய்ச்

சேரும்... மாமி! என்று கூறினுள் செல்வி.

'நம்புக்கணேயில் றெயிலுக்குப் பின்னுலேயும் ஒரு எஞ்சின் பூட்டுகிறது, ஆச்சி...'

'ஒரு கோச்சிக்கு இரண்டு எஞ்சினே?... ஏன்ரா?'

'நம்புக்கணேயில் இருந்து கண்டிக்குப் போற பாதை வலு ஏற்றம். ஒரு எஞ்சின் சரியாக இழுக்காது. அதனுலே பின்னுலேயும் ஒரு எஞ்சினைப் பூட்டித் தள்ளுகிறது... ஆச்சி!'

றெயிலின் முன் எஞ்சின் கூவியது. பின் எஞ்சின் அதனே ஆமோதித்துக் கூவியது.

றெயில் பெருமூச்சை எறிந்தபடி நம்புக்கணேயை விட்டுப் புறப்பட்டது.

'பிள்ளே...' என்று கூப்பிட்டாள், ஆச்சி

'என்ன, மாமி!'

உங்கடை யூனிவேசிற்றிப் பொடியன்களும், பொடிச்சிகளும் யாழ்ப்பாணத்துக்கு வரேக்கை றெயிலுக்கை கும்மாளம் போடுவியளாமே?'

'அது முந்தித்தான், மாமி' என்ற செல்வி, சிவராசாவைத் திரும்பிப் பார்த்தாள். 'குடிச்சுப் போட்டு கூத்தடிப்பினம்!... பாட்டுப் பாடுவினம்... தூஷணம் பேசுவினம்...'

'எல்லாருமோ?...'

'எல்லோருமில்லே மாமி! சிலர்தான்... சிலர் செய்கிறது எல்லாருக்கும் பழி! அதுக்குள்ளே வெற்றிலே தின்னுத நல்ல பிள்ளேயளும் இருக்கும் மாமி!'

'என்னேப்போல ஆச்சி!' என்ருன், சிவராசா.


'பொய்...' என்ருள் செல்வி 'ஒருக்கா மாமி...' செல்வி கூறுமுன் சிவராசா குறுக்கிட்டான்.

'அங்கை பாரெணே, பெரிய பள்ளத்தாக்கு...'

ஆச்சியின் கவனம் திரும்பியது; ஒரு கணம் பள்ளத்தாக்கையும், மலேகளேயும் பார்த்துவிட்டுத் திரும்பினுள்.

'பொம்புளேப் பிள்ளேயளும் குடிக்கிறவையோ?'

'ஏன் இல்லே, ஆச்சி' என்ருன் சிவராசா.



(யூனிவேசிற்றிப் பொடியள்)

'ஏன் இப்படி வீண் பழி சொல்லுறியள்.'

'ஏன்? நீங்க தண்ணி குடிக்கிறதில்லேயோ...'

ஆச்சி பேசினுள்:

'பேப்பரிலே உங்களேப்பற்றி அடிக்கடி வருகுதுதானே? ஒரே குழப்பம் செய்தபடி யாழ்ப்பாணம் வருவினம்... யூனிவேசிற்றியிலே இருக்கேக்கை உங்களுக்குக் கவலேயே தெரிகிறதில்லே. எவ்வளவு கஷ்டப்பட்டு வீட்டுக்காரர் பணமனுப்புகினம் என்றும் பலர் யோசிப்பதில்லே. படிச்சுப் போட்டு வந்து வீட்டிலே வேலேயில்லாமல் இருக்கிறதையும் நினேக்கிறதில்லே. இவற்றையெல்லாம் யோசித்தால் இப்படியெல்லாம் குழப்படி செய்வினமா'?

'உதையெல்லாம் யோசித்ததாலேதான் இங்கை இருக்கும் வரையாவது சந்தோஷமாக இருப்பமென்று கூத்தடிக்கிருன்கள்...' என்ருன் சிவராசா.

'இங்கை வாறது உதுக்கேடா. நாளேக்கு உலகத்துக்குப் புத்தி சொல்லப் போறதுகள்... கெட்டுப் போறதுக்கே இங்கை படிக்க வாறது...'

'அவர்கள் ஒருக்காலும் கெடமாட்டாங்கள் ஆச்சி! இந்தப் பொம்புளேப் பிள்ளேயளேயும் இங்கை படிக்க அனுப்புறத்தாலே தான் கெட்டுப்போருன்கள்...'


செல்விக்குக் கோபம் வந்து விட்டது.

'உங்களை யாரும் கெடச் சொன்னவையே... வாயாலை வீணீரை ஊற்றிக் கொண்டு பெட்டையளுக்குப் பின்னாலை திரிகிறது... பிறகு எங்களைத் தூற்றுகிறது...'

'நீங்க சிரிச்சுச் சிரிச்சு அவங்கடை எல்லாத்தையும் வாங்கிப் படிச்சுப் போட்டுப் பாஸ் பண்ண...பெயில் விடுகிறது அவங்கள்தானே?...'

'ஏதோ தெரிஞ்சதுபோலை கதையாதையுங்கோ?'

'நான் நாலு வருஷம் அங்கை படிச்சனான்! விளங்குதே!...'



(இப்படிச் சண்டை போட்டால்)

ஆச்சிக்கு மகனதும், மருமகளினதும் சண்டையைப் பார்க்கச் சுவையாக இருந்தது.

'இப்பிடிச் சண்டை போட்டால் எப்பிடித்தான் வாழப் போகிறியளோ?'

'இவர் உப்புடித்தான் மாமி பொம்பிளையளை எப்பவும் குறைவாய்ப் பேசுறது...'

'திரியுறது... அவளவைக்குப் பின்னாலை... குறை சொல்லுகிறது அவளவையளை...' என்று மருமகளுக்குப் பரிந்து வந்தாள் ஆச்சி.

'நாங்கள் அப்படி ஒருத்திக்குப் பின்னாலை திரியவில்லை...' என்றான் சிவராசா.

'ஐயோ, பாவம்... கைவிரலை வைச்சால் கடிக்கத் தெரியாது..'

'வைச்சுப் பாரேன்!...'

'ஆசைதான்...' என்றாள், செல்வி. அளகல்லையில் றெயில் வந்து நின்றது.

## சிரித்திரு

தனது நூறாவது பிறந்த தினத்தைக் கொண்டாட ஒரு பாட்டி பேரனின் ஸ்கூட்டரில் ஏறி ஊரைச் சுற்றினாளாம். இது பாரிசில் நடந்தது.

ஃ ஃ ஃ


தனது மூன்று மனைவியரின் தொணதொணப்பைச் சகிக்க முடியாமல், பல தாரத்தடைச் சட்டத்தின் கீழ் தனக்கு தண்டனையளிக்கும் படி நீதிபதியிடம் மன்றாடிய நபருக்கு நான்கு வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாம்.

ஃ ஃ ஃ

### —வலி—

இலங்கைப் பூமிசாஸ்திரம் தெரியாத ஒருவர் 'சாதாரண வலியையே மனிதனால் சகிக்க முடியாது. இலங்கை அரசாங்கம் மகா வலித் திட்டத்தைச் செயற்படுத்தப்போகுதாமே'!

### தேர்தல் சீசன்




ஒரு டசின் நேசனல், ஒரு டசின் வேட்டி, ஒரு டசின் சால்வை எல்லாம் புதிசா கொண்டுவந்திருக்கிறன். இதை நல்லா அடிச்சுத் தோச்சுக் கிழிச்சு கனகாலம் பாவிச்சதுமாதிரி ஆக்கித்தர வேணும்.



இன்பம் எங்கே, இன்பம்
எங்கே என்று தேடு... அது
எங்கிருந்த போதும் அதை
நாடி ஓடு...



கல்கி பீடி நிறுவனத்தின் புதிய தயாரிப்பு

**எஸ். எஸ். பீடி**

கைதேர்ந்த தொழிலாளர்களின் பெரு
முயற்சியால் உருவாக்கப்படுவதுதான்

**எஸ். எஸ். பீடி**

யாவரும் விரும்பிப் புகைக்கவல்லது

**எஸ். எஸ். பீடி**

தயாரிப்பாளர்களும், விற்பனையாளர்களும்:

## எஸ். சின்னத்துரை அன் சகோதரர்கள்

கல்கி மாளிகை, 79, 79/1 மெசஞ்சர் வீதி, கொழும்பு-12.

கிளை:

39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

நேரம் காட்டும் கடிகாரத்தைப் பணங் கொடுத்து வாங்கலாம்!

நேரத்தைப் பணங் கொடுத்து வாங்க முடியுமா?

நேரத்தின் மகிமையை உணர்ந்து

தயாரிக்கப் பட்டதே,

**மில்க்வைற் சலவைப் பவுடர்**




துரிதமாகவும், தூய்மையாகவும் சலவை செய்வதற்கு,

மில்க்வைற் சலவைப் பவுடரைப் பாவிக்கப் பழகுங்கள்

**ஒரு பைக்கற் மில்க்வைற் சலவைப் பவுடரின் விலை சதம் 35 மட்டுமே.**

**பாவித்த 10 வெற்றுறைகளைச் சேகரித்து திறப்புக் கோவையொன்றைப் பெறுங்கள்!**

**மில்க்வைற் சோப்**
**தொழிற்சாலை**

**காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 7233 தந்தி: **மில்க்வைற்.**



அவர்:- என்னப்பா நீ செத்து போயிட்டேன்னு இல்லையா, நினைச்சேன்!

மற்றவர்:- ஐயோ! ஏனப்பா அப்பிடி...

அவர்:- இன்னைக்கு காலமே ஒன்னைப்பத்தி ஒருத்தன் ரொம்பநல்லாச்சொன்னான்.

ஃ ஃ

அட்வகேட் எண்ணிக்கை கூடினால் கேஸ் நீடிக்கும்.

டாக்டர் எண்ணிக்கை கூடினால்...நோயாளி வயசு குறையும்.

—யாரோ

ஃ ஃ

'என்ன சார் இங்கே கூட்டம்?'

'ஒருத்தருக்கு கழுத்து முறிஞ்சு போச்சு'

'எத்தனையாவது மாடியிலேயிருந்து விழுந்தார்?'

'மாடியிலேயிருந்து விழல்லை சார்... கட்டிடத்திற்கு எத்தனை மாடின்னு பார்க்க நிமிர்ந்து பார்த்தாராம்!

ஃ ஃ

கர்வம்பிடித்த ஓவியர்:- நான் வரைந்திருக்கும் படங்களையெல்லாம், ஏதாவது தர்மஸ்தாபனத்துக்குக் கொடுக்கலாம்னு பார்க்கறேன்,

விமர்சகர்:- ஏன் குருடர்பாடசாலைக்குக்கொடுக்கலாமே!

# சற்றே சிரித்திரும் பிள்ளாய்!

—வழக்கறிஞர்- மு. திருநாவுக்கரசு—

பசி, தாகம், கோபம், ஆதியன மக்களுக்கு மட்டுமல்ல; மாக்களுக்குமே சொந்தமானவை. ஆனால் 'சிரிப்பு' என்பதோ அப்படியானது அல்ல. அது மனித குலத்திற்கு மட்டுமே சொந்தமானதென்பார்கள். கலைவாணரது வார்த்தைகளில் சொல்வதானால் சிரிப்பதிலே எத்தனையோ வகையுண்டு.

வாழ்வின் தரத்திற்கும், நோக்கிற்கும், போக்கிற்கும் ஏற்றபடி அமைந்து விடுகின்றது, இந்தச் சிரிப்பு. உல்லாசப் பவனி வரும் தனவந்தர் சிரிப்புக்கும், தெருவோரத்தில் பிச்சை கேட்கும் அந்த ஏழையின் சிரிப்புக்கும் கருத்தும், காரணமும் நேர்மாறு. தொட்டிலிலே கிடந்து தாயைப் பார்த்துச் சிரிக்கின்றது குழந்தை அக் குழந்தையைப் பார்த்து சிரிக்கிறாள் அன்னை. அதே மனைவியைப் பார்த்து, கணவனும் ஒரு சிரிப்புச் சிரிக்கின்றான். இத்தனையையும் கண்ணுற்ற 'ஆயாவும்' சிரிக்கின்றாள். இங்கே எல்லாரிடமும் சிரிப்புத்தான். ஆனால், மகவின் சிரிப்புக்கும் மனைவியின் சிரிப்பிற்கும், கணவனது சிரிப்புக்கும், கடைசியில் ஆயாவின் சிரிப்புக்கும்,- இப்போது நீங்கள் மனதிலே சிரிக்கிறீர்களே— இதற்கும் வேற்றுமை அனந்தம்.

தோட்டப் புறத்திலே மதிற் சுவருக்கருகில் காதலனைக் காதலி கண்டு கதைக்க முடியவில்லை. பதிலுக்கு அவள் ஒரு சிரிப்பு. அதற்கு அவன் ஒரு பதில் சிரிப்பு. இந்தச் சிரிப்பின் வியாக்கியானம் விளங்கும்தானே; பின் விளக்கம் எதற்கு?

முதலாளியைக் கண்டு தொழிலாளி சிரிப்பான். மணிப் பர்சைக் கண்டுவிட்ட 'பிக் பொக்கற்' சிரிப்பான். பொன்னகை பூட்டிய குழந்தையைக் கண்டு பாட்டி சிரிப்பாள்; அதே குழந்தையைக் கண்டு கள்வனும் சிரிப்பான். போர்க்களத்தில் வென்றவன் சிரிப்பான். புறமுதுகு காட்டி ஓடிய கோழையும் ஏதோ ஒரு சிரிப்பு சிரிப்பான். இதைப் பார்த்தவர் பலருமே சிரிப்பர்.

இப்படியாக, சிரிப்பிற்கு உதடு அசைகின்றது. உள்ளே உள்ள பல் வரிசை தெரிகின்றது. ஆனால் இதில் எத்தனை அர்த்தம். கடமைச் சிரிப்பு, கண்ணியச் சிரிப்பு, காதல் சிரிப்பு, சோகச் சிரிப்பு, வீரச் சிரிப்பு, அசட்டுச் சிரிப்பு, ஆசைச் சிரிப்பு, ஆறுதல் சிரிப்பு, பழிக்குப்பழி வாங்கும் பாதகச் சிரிப்பு—இப்படி சிரிப்பின் வகையே ஏராளம், ஏராளம் இதனை ஆராய்ந்தால் 'டாக்டர்' பட்டமே பெற்றுவிடலாம்.

இப்படியாக மனித குலத்தின் சொந்தமான இந்தச் சிரிப்பை அள்ளி வழங்கும், அருந்தமிழ் சிரித்திரன் ஆசிரியரை எண்ணும்போது ஒருவகைச் சிரிப்பு வருகின்றது. காரணம்—இந்தச் சிரித்திரன் ஆசிரியர் இற்றை வரை நானறியச் சிரித்திரார்,

## முத்துச் சிரிப்பு



உலகத்தில் எல்லாப் பாகங்களும் விருத்தி அடைந்து விட்டன; மனிதனின் தொப்பிக்குக் கீழுள்ள பாகம் மட்டும் விருத்தியடையவில்லை.

—பேர்னாட் ஷா

ஃ ஃ ஃ

## சிக்கல் சிந்தனைகள்

சிந்திக்கின்றாய் என்று நீ சிந்திக்கும் போதும், நீ சிந்திக்கவில்லை. சிந்திக்கவில்லை என்று நீ சிந்திக்கும் போதும், நீ சிந்திக்கவில்லை.

ஃ

உலகத்திலுள்ளவைகளெல்லாம் உனக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் உலகத்திலுள்ளவைகளுக்காக நீ படைக்கப்படவில்லை.

—சுவாமி சிவானந்தர்

ஃ

சூழ்நிலை ஒரு மனிதனை ஆக்கினால் அவன் மனிதனல்ல; சூழ்நிலையை ஆக்குபவனே மனிதன்,




**சிரிப்பு வருது சிரிப்பு வருது**

சித்தம் நிறைகொண்ட சிங்காரச் சிரித்திரனே! சிரித்தறியா மக்களையும் சில கணத்துள் சிரிக்கவைப்பாய்.

**நெடுந்தீவு.** — ஞா. பாஸ்கரன்

'காதலிப்பூ!' கதை பலே ஜோர். அதை எழுதிய சரோஜினி தேவிக்கு எங்கள் பாராட்டுக்கள்.

**அலவத்துக்கொடை.** எச். எம். எம். பலீல்.

எடி சரோ! என்னடி இவளே..? இலங்கையிலும் சிறந்த எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள் என்பதை நிரூபித்து விட்டாயடி! புதுக்கரு, புலமையான நடை, குறுஞ்சிப்பூ நுவரெலியாவில் இருந்துவராமல் கோடைக் கானலில் இருந்தே வந்திருக்கலாம்

**கொழும்பு.** —விஸ்

தங்கள் 'சிரித்திரன்' இதழ் அண்ணாவும் அவரது அழியாப் புகழும் போல, வானமும் நிலவும் போல நீடித்து புகழ் பெற்று பச்சை விளக்காய் பரிமளிக்க எனது ஊடே என்னுடைய நண்பர்களது இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

**தெற்குவீதி, காஞ்சிபுரம்.** —வி. பாலுசாமி ஐ. பி.ஏ.

தங்கள் பத்திரிகையின் சிறப்பையும் சீர்மிகு எழுச்சியையும் இங்குள்ள நண்பர் ஒருவர் மூலம் அறிந்து அளவிலா அகமகிழ்வு அடைந்தேன்.

**84 ஏ, சின்னமுத்து கவுண்டர் வீதி. கோயம்புத்தூர்.**
—கே. பாலகிருஷ்ணன்

விசித்திரக் கற்பனையை வரையும் செங்கண்ணனது மூளையும் கடவுளது விசித்திரமான படைப்புதான்

**பதுளை** சி. எம். நவரட்ணம்

இன்று ஈழத்தில்நகைச்சுவை கலைஞர்கள்பலர் இருக்கிறார்கள் இவர்களைப் பேட்டிகாண ஏங்கித் தவித்துக் கொண்டு இருக்கிறோம்'

**விமலபாவனம் நெடுங்கேணி.** —இ. தர்மபாலன

## கண்டறியாதது

(அறிவியல் கவிதை நூல்)
வெளியிடுபவர்கள்:
வட இலங்கை தமிழ் நூற் பதிப்பகம் சுன்னாகம்.

விலை — 2—25

கவிஞர் சிவானந்தனின், 'கண்டறியாதது' கவிதைத் தொகுதி வாசித்தேன். மரபு என்ற வரம்புக்குள் அடைபட்டுக் கிடக்காமல் பரந்த அறிவியல் உலகில் கால்வைத்துவிட்ட துணிவுக்காக கவிஞரைப் பாராட்டலாம். கவிதைப் புது வெள்ளத்திற்குக் களிமண் வரம்பு கட்டத்துடிக்கும் பண்டிதர்கள், மேலும் மேலும் உடைப்புகள் பெருகுவதைக் கண்டு கொதிப்படையக் கூடும். சிக்கலான அறிவியல் விஷயங்களை புதிய கலைச் சொற்களை — வாழ்வின் மென்மையான உணர்வுகளுடன் கலந்து கவிதை படைப்பது என்பது இலகுவான காரியமா என்ன? போராட்டத்தில் கவிஞர் தாக்குப்பிடித்து நிற்கிறார்.

கந்தையா, ஆச்சிமுத்து, வடிவேலு, முத்தம்மா என்பவர்களுக்கு மேலும் சிறிது முக்கியத்துவம் அளித்திருக்கலாம். எனினும் அவர்கள் உயிர்பெற்றிருக்கின்றார்கள்.

'காணி சொந்தமாக்காட்டால்
மீட்சியில்லை களைப்புடனே
உழைப்போரின் ஆட்சியில்லை'

மேற்கண்ட அடிகளைப் படிக்கும்போது கவிஞர் எங்கு நிற்கிறார் என்பது புரிகின்றது.

கரடுமுரடான அறிவியல் பிரச்சினைகளுடும், சமுதாய உணர்வைக் கவிஞர் மறக்காமல் இருப்பது வியப்பிற்குரியதுதான்.

ஓரிடத்தில்,

'வீட்டினிலே பெண்ணை பூட்டி
வைத்தோர்காலம்
போயொழிந்தின்றைக்குக்
கோயில்களில் பூட்டிவைத்துள்
ளனர் தெய்வங்களை என்ற
புன்மை ஒழித்தவன் நல்லூ
ரான்.'

என வருகின்றது.

இக் கவிதைத் தொகுப்பை படிக்கின்ற ஒவ்வொருவரும் தமிழில் புதுமை புகுத்தும் முயற்சிக்கு அங்கீகாரம் வழங்கும் பெருந்தொண்டு செய்பவராவர். இது நல்லதொரு விடிவெள்ளி.

— **விஸ். ஜெயா**

# திவ்ய திவலை

குப்பிழான் - ஐ. 'சண்முகன்'

**வி**வாகமான நாலாம் நாள் படுக்கையறைக்குப் போனபோது எதுவித சலனமும் முகவாட்டமும் இன்றி, அவள் என்னைப்பார்த்துக் கேட்டாள் —

'முன்பு உங்களுக்கும் விமலாவுக்கும் ஏதாவது தொடர்புகள் இருந்ததுண்டா?

தீயை மிதித்தவன் போல நான் திடுக்கிட்டேன். எந்த இரகசியத்தை அவள் அறியக்கூடாது என்பதற்காக - கட்டிக்காத்து ஜாக்கிரதையாகப் பழகினேனோ அதை அவள் அறிந்துவிட்டாளா? அவள் கேள்வியால் ஏற்பட்ட அதிர்ச்சியைத் திக்கித் திணறிச் சமாளித்து—மெதுவாக, பவ்வியமாக அவளைப் பார்த்துக் கேட்டேன்—

'என்ன சீலி அப்படிக் கேட்கிறாய்? என்மீது உனக்கு நம்பிக்கை இல்லையா?'

அவள் முகம் சிவந்தது. கன்னத்தில் குழிவிழ மெதுவாக முறுவலித்தாள். என்னை நெருங்கி, வளையல்களணிந்த வலக்கரத்தால் என் கழுத்தைச்சுற்றி வளைத்து அணைத்து, முகத்தோடு முகம் பொருந்த, விழிகளில் ஏக்கம் ததும்ப, தனது இடக் கையால் எனது மார்பைத் தொட்டுச் சொன்னாள். —

'நீங்கள் தான் என் தெய்வம். நான் இத்தெய்வத்தை ஆராதிக்க வந்த பக்தை. இந்த இதயத்தின் இயக்கத்தில் தான் என் இதயமும் இயங்கும். இந்த இதயத்தின் இன்ப, துன்ப, துயர, வேதனைத் துடிப்புகள் தான் என் இதயத்திலும் எதிரொலிக்கும். நீங்களின்றி நானில்லை. நீங்களும் நானும் ஒன்று. உங்களை நம்பாவிட்டால், நான் என்னையே நம்பவில்லை என்றல்லவோ அர்த்தம்'.

என்ன தோன்றியதோ தெரியாது திடீரென்று எழுந்து, குனிந்து என் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றினாள். நான் அவளை அணைத்துக் கொண்டேன்.

சூதுவாது அறியாத குழந்தை உள்ளம் கொண்ட இவளை நான் ஏமாற்றுகிறேனா? முழுக்கமுழுக்க என்னையே நம்பி, எனக்காகத் தன்னை— தன் வாழ்வை, யாவற்றையுமே அர்ப்பணித்திருக்கும் இவளுக்கு நான் துரோகம் செய்கின்றேனா? என் நெஞ்சம் துடிதுடித்தது. என் கண்ணில் நீர் அரும்பிற்று.

அவள் மெதுவாக என் அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள். வாஞ்சையோடு என் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். என் கண்களில் கண்ணீர் வருவதைக்கண்டு, 'கண்களில் தூசி விழுந்துவிட்டதா' என்று கேட்டு, தன் சேலைத் தலைப்பினால் என் கண்களில் ஒற்றினாள்.

இருதலைக்கொள்ளி எறும்பாக நான் துடித்தேன். வெளியே வீசியஇளங் காற்றில் மரஇலைகள் சலசலத்தன. விடிவிளக்கின் ஒளிச்சுவாலை ஆடி அசைந்தது. நானிருந்தகடற்கரையையொட்டிய அறையின், கிழக்குப்புற ஜன்னல் வழியாக நீலக் கடலலைகளின் இரைச்சல் கேட்டது. நாம் படுக்கையில் கிடந்து புரண்டோம்.

விமலாவுடன் பழகிய அந்த நாட்கள், மங்கிய நினைவுகளாக என்மனத்தில் மிதந்தது. பல்கலைக்கழகத்துக் கட்டிடங்களும், விரிவுரை மண்டபங்களும், நூல் நிலையமும், பனி மூடிய மலைச் சிகரங்களும், முருகன் கோவிலும், பேராதனைப் பூங்காவும், உதிர்ந்த மலர்களைச் சுமந்துகொண்டு ஓடிச்செல்லும் மகாவலிகங்கையின் அசுர வேகமும், பூக்களாய்ப் பூத்துக் குலுங்கும் மரங்களும், தை மாசி மாதக் கடும் பனிக் குளிரும், எல்லாவற்றிலும் சோடியாய், சோடியாய், சோடியாய்...!

வாழ்க்கையில் நினைப்பதெல்லாம் நடப்பதில்லைத்தானே! அப்படி நினைப்பதெல்லாம் நடக்கும் என்றால், 'சந்தித்து — அன்பு செய்து—பிரிகின்ற' இந்த வாழ்க்கைக்கு அர்த்தமே கிடையாதே'.

நான் பெருமூச்சு விட்டேன். அருகில் 'சீலி' நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்தாள். 'தான் நம்பி வந்தவர், தன் நம்பிக்கைக்கு ஏற்றவர்' என்ற தெம்பில் அவள் நிற்சலனமாக உறங்கிக் கொண்டிருந்தாள். உறங்குகின்ற அவள் முகத்தின் அந்த அமைதியை — சாந்தத்தை என்னால் தாங்கவே முடியவில்லை. என் இதயத்தில் ஒரு குறுகுறுப்பு, நான் அவளுக்குத் துரோகம் செய்கிறேனா?

அவளின் கரங்களிலொன்று என்மார்பின்மீது அடைக்கலம் தேடிக் கிடந்தது. என் நெஞ்சில் இடம் பெற்றிருக்கிற கபடம், இதயத்துடிப்பு'களின் வழியாக அவள் கைகளுக்கு எட்டினாற்போல, அவள் தன்கையையெடுத்து, மறுபக்கமாகத் திருப்பி, நீட்டி நிமிர்ந்து படுக்கலானாள்.

நான் என்னுள்ளே நோக்கினேன். என்னை நம்பிய ஒருயிருக்கு நான் செய்கின்ற துரோகத்தை எண்ணி மறுகினேன். என் வாழ்க்கையின் கறை படிந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் புழுக்களாக மாறி என் இதயத்தைத் துளைப்பது போலத் துடிதுடித்தேன். அந்த வேதனையைத் தாங்கமாட்டாது வாய்விட்டுக் கத்த வேண்டும் போலத் தவித்தேன்.

''அவைகளை அவளுக்குச் சொல்லிவிடலாம்'' என்று எண்ணிய போது மனதில் ஒரு பாரம் குறைந்தமாதிரி—மனம் லேசான மாதிரி—அந்தரத்தில் அப்படியே அலாக்காக பறக்கிற சுகம்மாதிரி இருந்தது. அவைகளை அவளுக்கு சொல்லா விட்டால் என்வாழ்வில் நிம்மதியே கிடையாதென்று நான் உணர்ந்தேன்.

அவள் மறுபுறம் திரும்பிப் படுத்தாள். அரைத்தூக்கத்தில் முனகுபவள்போல 'என்ன இன்னமும் தூங்கவில்லையா?' என்று கேட்டாள்.

நான் அவள் கரங்களை எடுத்து மார்பில் புதைத்துக்கொண்டே கேட்டேன். ''சீலி! நானென்று சொல்லுவேன், கோவித்துக் கொள்வாயா?''

அவள் தன்கைகளை விடுவித்து என்வாயைப் பொத்தினாள். அப்படி எல்லாம் சொல்லக் கூடாதென்று மன்றாடினாள். 'தெய்வத்திடம் பக்தன் கோவிக்கலாமா?' என்று கேட்டாள்.

''நாம் நினைத்தமாதிரி தெய்வம் நடக்காவிட்டால் பக்தன் கோவிக்கலாம்தானே'என்றேன்.

அவள் சொன்னாள்,

''இந்தத் தெய்வத்திடம் இந்தப் பக்தை என்ன எதுநடந்தாலும் கோவிக்க மாட்டாள்''

## சிரித்திரு

மாட்டையும் மாமியாரையும் ஏரில் பூட்டி உழுத குற்றத்திற்காக, ஒரு நபர் ஜீவ காருண்ய சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப் பட்டாராம்.

நான் என்னுள் அழுதேன். எனது கயமையை எண்ணி அழுதேன். அவள் அதைச் சொல்லு மாறு மன்றாடினாள். நான் என்னை மறந்தவனாகச் சொல்லத் தொடங்கினேன்.

தெய்வ சன்னிதானத்தில் நாம் செய்த சிறுமைகளை நினைத்து அழுது உருகுவதுமாதிரி நான் சொல்லத்தொடங்கினேன். விமலாவுக்கும் எனக்கும் இடையில் நிகழ்ந்த ஒவ்வொரு சிறு சம்பவத்தையும் அப்படி அப்படியே நான் அவளிடம் ஒப்படைத்தேன். ஒரு விதவெறியில், என்னைமறந்தநிலையில்—என் வாழ்வில் நிகழ்ந்த அந்தரங்கங்களை எல்லாம் அவளிடம் விண்டுவைத்தேன்.

மழை பெய்து ஓய்வதுபோல, நான் பேசி முடிந்து அவளை நிமிர்ந்து பார்த்தேன்.

அவள் அழுதாள், தேம்பித் தேம்பி அழுதாள். 'இந்தப் பாவியில் இவ்வளவு நம்பிக்கை வைத்த அவள் அழத்தானே வேண்டும், நல்லாய் அழட்டு'மென எண்ணினேன்.

அவளின் முகத்தை நிமிர்த்தி ''சீலி என்னுடன் கோபமா? என்னை மன்னிப்பாயா அம்மா'' என்றேன்.

அவள் என்வாயைப் பொத்தினாள்.

''சீலி என்னுடன் கோபமா'' என்றேன் மீண்டும். என்குரல் கம்மியிருந்தது. அவள் இல்லையென்று தலையசைத்தாள். ''அப்போ, நீ ஏன் அழுதாய்?'' என்றேன். அவள் என்னை நிமிர்ந்து பார்த்தாள், கண்ணீரைத் துடைத்துவிட்டுச் சொன்னாள்.

வாழ்க்கையின் இளமைப்பருவக் கனவுகளில், சிலர் தவறிவிடலாம், நான் அதைப் பொருட்படுத்த மாட்டேன், நான் அதற்காக அழவில்லை. இந்த ஏழைமீது இவ்வளவு அன்பு வைத்து, நம்பிக்கைவைத்து இவற்றையெல்லாம் சொன்னீர்களே அத்தான்-அந்த மகிழ்ச்சியின் கனத்தை என்னால் தாங்கமுடியவில்லையே அத்தான்' என்று, என்மார்பில் தன் முகத்தைப் புதைத்து அழுதாள்.

நான் என்னுள் விம்மித்து நின்றேன். அவள் அன்புக் கடலில் நான் அணுவின் அணுவாகச் சிக்கித் தவித்தேன். ஆண்மகனாக நான் அவளின் பெருந்தன்மைக்கு முன்னால் எவ்வளவோ சிறியவனாக, துரும்பாக மாறிப் போனேன்.

என்மார்பில் புதைந்திருந்த அவள் முகத்தை நிமிர்த்தினேன். கீழைக் கடலில், அபர பட்சத்துப் பால்வண்ணச் சந்திரன் உதயமானான். நான் நிலவைப் பார்த்தேன். அவள் முகத்தையும் பார்த்தேன். அவள் முகம் களங்கமற்று நிர்ச்சலனமாக இருந்தது. நீலக் கடலலைகள் இரைந்து கொண்டே இருந்தன.

என் மனத்திலிருந்த கபடம் அகல, ஒருவரையொருவர், புரிந்துகொண்ட இலயிப்பில்—அந்தச் சுகத்தில், ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டோம். முந்திய மூன்று நாட்களில் இல்லாத இறுக்கம் அதிலிருந்தது. கிழக்கு ஜன்னலினூடாக களங்கமற்ற பால்வெண்ண நிலவு எங்களைப் பார்த்துச் சிரித்தது.

—ஃ—

---

அவன்: ஐயோ.... டாக்டர் வயித்து வலி உயிர் போகுது... ஏதாவது மருந்து தாங்க.

அவர்: ஐயாம் சாரி... டாக்டர் அடுத்த ரூம்லே இருக்கார். அவர் பார்த்தப் பறம் தான் நான் பார்க்கிறது. நான் மரணப் பதிவு அதிகாரி.

## உயிர்ப் பிச்சை

நடு நிசி. சன நடமாட்டமில்லாத ஒரு தெரு வழியே ஒரு பணக்காரர் தனியே நடந்து செல்கிறார். அவரிடம் அப்போதும் நிறையப் பணமிருந்தது. விலையுயர்ந்த ஆபரணங்களும், கடிகாரமும் அணிந்திருந்தார். அப்போது திடீரென்று முரட்டுத் தோற்றம் கொண்ட ஒருவன் அவரை நெருங்கி, ''ஐயா, நான் சாப்பிட்டு இரண்டு நாட்களாகின்றன—பஞ்சத்தால் பரிதவிக்கும் எனக்கு உதவி செய்வீர்களா? என்னிடம் இத்துப்பாக்கியைத் தவிர வேறொன்றுமில்லை'' என்று கூறியபடியே அவரது நெஞ்சுக்கு நேரே துப்பாக்கியை நீட்டினான்.

—ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்

## சிம்ம இலக்கணம்

சர்க்கஸில் இருக்கும் ஒரு சிங்கம் மற்றச் சிங்கத்தைப் பார்த்து, 'எனக்கு எமது இறந்துபோன பழைய முதலாளியில் தான் நல்ல விருப்பம். அவர் மிகவும் நல்லவர், அன்பானவர், மிகவும் ருசியானவரும் கூட' என்றது.





அம்புலிமாமா

சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் மாதப் பத்திரிகை

இலங்கை முழுவதும் சப் ஏஜண்டுகள் தேவை.

சோல் ஏஜண்ட்
த. தம்பித்துரை அன் சன்ஸ்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


பொம்மை



கலையுலகின் பெருமைப் பெட்டகம்

இலங்கை முழுவதும் சப் ஏஜண்டுகள் தேவை...

சோல் ஏஜண்ட்
த. தம்பித்துரை அன் சன்ஸ்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.




## அதி விவேக அதிபர்

நான் கல்லூரியிற் க. பொ. த. ப. வகுப்பிற் பயின்றுகொண்டிருந்த காலத்தில் ஒரு நாள் தமிழ் இலக்கிய பாட நேரத்தில் இலக்கிய ஆசிரியர் வகுப்பிற்கு வருகை தரவில்லை. இதனுல் வகுப்பிலுள்ள மாணவர் எல்லோரும் ஒருவரொடொருவர் கதைத்துக் கல்லூரியின் அமைதியைக் கெடுத்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது வகுப்புக்கள் ஒழுங்காக நடை பெறுகின்றனவா என நோட்டம் பார்த்துக் கொண்டுவந்த கல்லூரி அதிபர், ஆசிரியரின் அமைதியற்றிருந்த எமது வகுப்பினுள் நுழைந்தார். அதிபருடன் வகுப்பினுள் அமைதியும் நுழைந்தது.

'இப்பொழுது என்ன பாடம் நடைபெற வேண்டிய நேரம் வகுப்பிலுள்ள மாணவரை நோக்கி அதிபர் வினவினர். தமிழ் இலக்கிய பாட நேரம் என மாணவர் விடையளித்தனர் உடனே அதிபர்' தமிழ் இலக்கிய பாடத்திற்குரிய நூல்கள் என்ன' எனக் கேட்டார். நான் எழுந்து 'கும்பகருணன் வதைப் படலம்' திருவிளையாடற் புராணம், மலரும் மாலேயும், பண்டைத் தமிழர் பண்பாடு என்று கூறினேன்.

இதைக் கேட்டதும் அதிபர் 'மிகப் பொருத்தமான பாட நூல்கள்தான் உங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்நூல்களுக்கும் இதைப்பயிலுகின்ற உங்களுக்கும் இடையேயுள்ள பொருத்தமென்ன கூறுங்கள் பார்க்கலாம்' என்ருர். வகுப்பில் ஒரே அமைதி மாணவருள் எவரும் அதிபர் குறிப்பிட்ட பொருத்தத்தைப் புரியவில்லை. எனவே அதிபரே அதனை விளக்கினுர்.

'இவ் வகுப்பிலுள்ள நீங்கள் எல்லோரும் இரவில் கும்பகருணப்படலம் வாசிப்பீர்கள். இங்கு வகுப்பு நேரத்திற் திருவிளையாடற் புராணம். கல்லூரிவிட்டுப் போகும்போது மலரும் மாலேயும். இவற்றையெல்லாம் உங்கள் பழக்கமாகப் பெற்றதுதான் நீங்கள் கற்றுக்கொண்ட பண்டைத் தமிழர் பண்பாடு அப்படித் தானே' என்று அதிபர் பொருத்தமுறக் கூறியதைக் கேட்டதும், அதுவரை அதிபரின் வருகையோடு நுழைந்து குடிகொண்டிருந்த அமைதி மாணவ மாணவியரின் சிரிப்பு ஆரவாரத்தினுல் விடைபெற்றுக் கொண்டது. மணி ஓசை கேட்டு அதிபரும் விடை பெற்ருர்.

**—பரிசுப் பகிடி—**

சி. ச. தாஸ்,
48, பேங்சால் வீதி,
கொழும்பு

## தாள் மை

அது ஒரு பெரிய 'ஹோல்' எஸ். எஸ். சி. தேர்வுக்கான பரீட்சை நடந்து கொண்டிருந்தது. அன்று 'கெமிஸ்டிரி' பரீட்சை மாணவர்கள், பரீட்சை எழுதுவதில் ஈடுபட்டிருந்தார்கள். அன்று எங்களுக்கு வழங்கியிருந்த பேப்பர் மையை உறிஞ்சிக் கொண்டிருந்து. இஇருப்பினும் நாங்கள் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் எழுதுவதில் தீவிரமாக இருந்தோம். எனக்கு முன்னுல் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்த ரத்தின ராஜா மட்டும் எழுந்து 'சேர்' பேப்பர் நன்ருகவேயில்லை. சும்மாவா பேப்பர் கொடுக்கிறீர்கள்? இம் முறை இரண்டாவது தரம் பரீட்சை எடுப்பதால் பணம் கட்டியிருக்கிருேம். ஆனுல் மை ஊறும் பேப்பரைக் கொடுக்கிறீர்கள் இப்படி எழுதும்போது மை ஊறிக் கொண்டிருந்தால் 'பாஸா'கிறவனும் 'பெயிலாகி' விடுவான். இது ரொம்ப அநியாயம்' என்று கண்டபடி பேசினுன்.

எல்லா ஆசிரியர்களும் வாயடைத்துத் 'திரு திரு' வென்று விழித்தார்கள். மாணவர்கள் ஒரு நிமிஷம் ஸ்தம்பித்து எழுதுவதைக் கூட நிறுத்திவிட்டார்கள். அங்கே மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த ஓர் ஆசிரியர் அவன் அருகே வந்தார். அவரும் அவன் மாதிரி கொஞ்சம் படபடப்பானவர்தான். மாஜி போலிஸ்காரர் 'தம்பி கோப்பித்துக் கொள்ளாதே. இப்போது சும்மா எழுது. அடுத்த டிசெம்பர் பரீட்சைக்கு வா, அப்போது நல்ல பேப்பராகத் தர ஏற்பாடு செய்கிறேன், என்ருரே பார்க்கலாம்.

[சம்பவம் உண்மை. பெயர்கள் கற்பனை இதை எழுதியவர்:

**சோமசுந்தரம் ராமேஸ்வரன்**
**அம்பாறை.**

## தலைகீழ்ப் பாடம்

ஒரு நாள் சமயபாடம் படிப்பித்துக் கொண்டிருந்த எங்கள் ஆசிரியர் திடீரென, பிள்ளைகளே! நான் இதுவரை படிப்பித்தவற்றைத் திருப்பிப் படியுங்கள் எனக் கூறிவிட்டு எங்கோ சென்ருர். அவர் மறையுமட்டும் பார்த்

துக் கொண்டிருந்த இந்திரன் என்னும் மாணவன், அவர் மறைந்ததும் புத்தகத்தை மேசைமீது சுழற்றிவிட்டு, சக மாணவர்களுடன் கதைத்து விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென வகுப்பில் ஆசிரியர் நுழைவதைக் கண்ட இந்திரன், அவசரத்தில் புத்தகத்தைத் தலைகீழாகப் பிடித்துக் கொண்டு, படிப்பது போல் பாசாங்கு செய்தான். அதனைக் கடைக் கண்ணால் அவதானித்த ஆசிரியர், இந்திரன் கையிலிருந்த புத்தகத்தைச் சுட்டிக்காட்டி, பிள்ளைகளே! இந்திரனுக்கு யாவும் தலைகீழ்ப் பாடம் எனக் கூறியவாறு இந்திரனை நெருங்கினார்.

க. சுந்தரலிங்கம்,
அல்லாறை தெற்கு.

## கொழும்பில் சொர்க்கம்

நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது நடந்த சம்பவமிது. கொழும்பில் வேலை நிமித்தம் காரணமாக 'பரடைஸ் பிளே'சில் வசிக்கும் எனது தந்தைக்குச் சுகவீனம் ஏற்பட்டதால் அவரைப் பார்ப்பதற்காக, நான் கொழும்பு போக நேரிட்டது. இதனால் கல்லூரிக்கு இரண்டு நாட்கள் போகவில்லை. மூன்றும் நாள் நான் கல்லூரிக்குச் சென்றபோது, இரண்டு நாட்களாக ஏன் கல்லூரிக்கு வரவில்லை? என ஆசிரியர் கேட்டார். சுவர்க்கத்தில் வசிக்கும் எனது தந்தையைப் பார்க்கச் சென்ற படியால் வரவில்லை என்றேன். மாணவர்கள் எனக்கு ஏதோ மூளைக்கோளாறு ஏற்பட்டுவிட்டதென நினைத்துச் சிரித்தனர். ஆசிரியரோ கோபத்துடன் என்னை வெளியேறுமாறு பணித்தார். கொழும்பில் 'பரடைஸ்பிளேஸ்' என்றோரிடம் இருப்பதாகவும், 'பரடைஸ்' என்பதற்குத் தமிழில் சுவர்க்கம்என்பது பொருள் எனவும், நான்அங்கேயே சென்றிருந்ததாகவும் கூறியதுதான் தாமதம்,வகுப்பேசிரிப்பொலியிலமிழ்ந்தது.

அ. பற்குணு,
சித்தங்கேணி.

# சீமைச் சிரிப்பு

வாடிக்கையாளர்:— என்னப்பா முடிவெட்ட ஏகத்தாரு சார்ஜ் பண்றியே! என் தலையிலே நாலு முடி தானே இருக்கு...

முடிதிருத்துபவர்:— சார்ஜ் உங்களுக்கு முடிவெட்ட இல்லை சார்... முடி எங்கேயிருக்குன்னு தேடத் தான்.

ஃ ஃ ஃ

ஒருவர்:— (சுகாதார அதிகாரியிடம்) எங்க வீட்டு வாசலிலே ஒரு கழுதை செத்து கிடக்கு அதை எடுத்து எறிய ஏற்பாடு செய்யுங்கள்.

சு. அதிகாரி: (கிண்டலாக) ஏன் அதை நீரே அடக்கம் செய்திருக்காலாமே!

ஒருவர்:— முதல்லே சொந்தக்காரங்களுக்கு அறிவிப்போம்னு தான் உங்ககிட்டே வந்தேன் சார்.

ஃ ஃ ஃ

டாக்டர்:— என்ன ஐயா... நான் 5 மணியிலிருந்து 8 மணி வரைக்கும்தான் நோயாளிகளை பார்க்கிறதுன்னு உமக்குத் தெரியாது!

நோயாளி:— அது எனக்குத் தெரியும் சார்... ஆனு என்னை கடிச்ச நாய்க்கு தெரியல்லியே சார்.

---

### குரு பார்வை



வாத்தியார்:

என்ன ஜோஸ்யர்வாள்! நான் உமக்கு என்ன கெடுதல் செய்தேன்? நான் 'டியூஷன்' சொல்லிக் கொடுக்கிற வீடுகளில் போய் குருமாறினுல்தான் பையனுக்கு படிப்பு நல்லாக வரும் என்று ஜோஸ்யம் சொல்லித்திரிகிறீராமே?

சோதிடர்:— ......?

—இ. தர்மபாலன்
நெடுங்கேணி.



அழகிய வேலைப்பாடுகளுடன் தங்க நகைகளா? நவீன நாகரீக புடவை தினிசுகளா? இன்றே விஜயம் செய்யுங்கள்.

## சிங்காரம்ஸ்

## டைமா நகை மாளிகை

47, செட்டியார் தெரு, கொழும்பு-11.

டெலிபோன்: 20875



# புனித நினைவு

—தெய்வீகன்—

புனிதா எனது இனிய ஞாபகங்களின் திறவுகோல்.

அவளது நினைவைத் தொடர்ந்தே எனது இனிய ஞாபகங்களெல்லாம் எழுகின்றன.

சிந்தனை வசப்படுகின்றேன்.

கல்லூரியின் கம்பீரமான கட்டிடங்களும், செழித்துயர்ந்த மரங்களும்...

...இவற்றையும் மீறி, கடந்து போன ஓர் அழகிய உணர்வு தலை தூக்குகின்றது.

ஏக்கத்தின் சுமை மனதை அழுத்த அந்த அழுத்தம் நீண்ட பெருமூச் சொன்றைத் தள்ளி வெளிப் படுத்துகின்றது.

கல்லூரி இறுதியாண்டுப் பரீட்சையின் முதலாவது நாள். பரீட்சை மண்டபத்தில் சக மாணவர்கள் சிதறியிருந்து பாடங்களை 'துனிப்புல் மேய்ச்சல்' செய்கிறார்கள். அவர்களில் நானும் ஒருவனாகிறேன்.

ஆழ்ந்த அமைதியினிடையே ஒரு சிலிர்ப்பு.

பாடப் புத்தகத்திலிருக்கும் கவனம் தடுமாறுகிறது. நண்பன் தவம் தோளைச் சுரண்டி விட்டு அப்பால் செல்கிறான்.

நிமிர்கிறேன்.

பரீட்சை மண்டபத்தின்முன் வாயிலருகே பார்வைகள் சந்திக்கின்றன. எனது உதடுகள் மெதுவாகப் பிரிகின்றன.

அடுத்த மண்டபத்தில்தான் 'அவளு'க்குப் பரீட்சை. இம் மண்டபத்திலுள்ள தனது தோழியரிடம் வந்திருக்கிறாள் போலும்! அல்லது...

சந்தர்ப்பம் அறிந்து ஒதுங்கிய நண்பன் தவம் திரும்பிவந்தமர்கிறான். நன்றியை எதிர் பார்த்திருக்காத நல்ல நண்பன் அவன். எனது அந்தரங்கச் சுமைகளை ஏற்றுத் தாங்கி வைத்திருப்பவன்.

பரீட்சை திருப்திகரமான முறையில் அமைந்திருக்கின்றது. விடைத்தாளைச் சேர்ப்பித்து விட்டுவெளியேறி, அடுத்தமண்டபத்தை உள்நோக்கியவாறே நடக்கிறேன். அங்கு 'அவள்' காணப்படாதது என் பார்வையில் வெறிச் செனப் படுகிறது. அவசரமாகக் கல்லூரி வெளிவாயிலுக்கு வருகிறேன்.

நண்பன் தவலோகநாதன் (தவம்) இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறானே? அவனுக்காகக் காத்து நிற்கப் பொறுமையில்லை.

பஸ் தரிப்பு நிலையத்தை அடைகிறேன். எனது வகுப்புத் தோழர்களிற் சிலர் நிற்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து, நடைபெற்று முடிந்த பரீட்சையை விமரிசித்துக் கொண்டே தந்திரமாகத் திரும்பி மறுபுறத்தை அவதானிக்கிறேன். ஒரு கணச் சந்திப்பில் பார்வைகள் திரும்புகின்றன.

''டேய், மச்சான்! இது என்ன விளையாட்டு?''

'எனக்குத் தெரியாதேடா!'

'ஆள் செரியான அமுசடக்கி தான்ரா!'

தற்செயலாகக் கவனித்து விட்ட அந் நண்பர்களின் கேலிப் பேச்சுக்கள் என் மனதைச் சங்கடப்படுத்துகின்றன.




ஒருவர்:

சுவீப் டிக்கட் வாங்கல்லியா அண்ணே! இன்னைக்கு இழுக்கிறுங்களாம்.

மற்றவர்:

அட, சும்மா போப்பா... பத்து பேர் சேர்ந்து போடற சீட்டே விழமாட்டேங்குது. சுவீப் டிக்கட்டா விழப்போகுது !?

விபரீதத்தை எதிர்பார்த்து அஞ்சுகிறேன்.

'அங்கு' கேட்டிருக்குமோ, இவர்களின் கூச்சல்?!

தவம் வருகிறான்.

அவனை எதிரே வைத்துக் கொண்டு உரையாடும் பாவனையில் 'அங்கு' நோட்டமிடுகிறேன். சற்றுத் தள்ளிப்போய் எனது ஒன்று விட்ட சகோதரியுடன் 'அவள்' தனியாகக் கதைத்துக் கொண்டிருக்கிறாள். நடந்த பரீட்சையைப் பற்றிய விமர்சனம் நன்கு நடக்கிறதோ?!

பஸ் வந்து நிற்கிறது.

பெண்கள் ஏறிக்கொள்ளு முன்னர், நாங்கள் ஏறி விடுகிறோம்.

தவம், நான், 'அவள்', சகோதரி இந்த ஒழுங்கு தற்செயலாகத்தான் நேர்ந்திருக்கிறதா?

அமர்வதற்கு வசதியான இடம் எமக்குக் கிடைக்கவில்லை- நிற்கிறோம்.

சற்று முன்னாலிருக்கும் ஆசனம் சகோதரியையும், 'அவளை'யும்தாங்குகிறது. இந்தவேளையில் தவம் திரும்பி என்னை ஒதுக்கி வந்து, பின்னால் நின்று கொள்கிறான்.

கொண்டக்ரர், 'முன்னுக்குப்போ'— என்று சொன்னதைச் சாட்டாக வைத்துக் கொண்டு, தவம் என்னைத் தள்ளி 'அவளி'ருக்கும் ஆசனத்தருகே கொண்டு வந்து விடுகிறான்.

நெஞ்சு படபடக்கிறது.

'அவள'ருகே அமர்ந்திருக்கும் சகோதரி, நின்று கொண்டிருக்கும் எனது புத்தகச் சுமையைப் பெறக் கை நீட்டுகிறாள். கொடுக்கிறேன்.

சகோதரி மேலாக இருக்கும் ஒரு புத்தகத்தைத் திறக்கிறாள்.

ஐயையோ, அதற்குள்ளிருக்கிறதல்லவா அக்கவிதை!

'அவளது' பெயர் ஒவ்வொரு வரியிலும் ஒவ்வோர் எழுத்தாக அமைய, எனது திறமை முழுவதையும் சேர்த்து அருமையான கவிதையொன்றை ஆக்கியிருந்தேன். போதாக் குறைக்கு, குறிப்பிட்ட அந்த எழுத்துக்களை மையினால் அழுத்தித் தெளிவாக்கியுமிருந்தேன்.

சகோதரி அதனை எடுத்துப் பிரித்து விட்டாளே!— சே, என்ன பழக்கம்!?— 'அவளு'ம் பார்க்கிறாள். நான் நண்பன் தவத்திடம் படபடப்புடன் திரும்புகிறேன். அதற்கு அவன் முறுவலுடன் என்னைத் தட்டியல்லவா கொடுக்கிறான்?!

சகோதரி நிமிர்ந்து என்னைப் பார்ப்பது கடைக்கண் உணர்வில் புரிகிறது.

'அவளை'ப் பார்க்க ஆவலிருந்தும் இனந் தெரியாத கூச்சமும், குற்றவுணர்வும் என்னைத் தடுக்கின்றன.

பஸ் நிற்கிறது. 'அவள்' இறங்குகிறாள்.

பஸ் 'அவளை'க் கடந்து போகும் போது எனது சகோதரியிடம் கையசைத்து விடை பெறுவதை அரைக் கண்ணால் பார்க்கிறேன்.

அடுத்த நிலையத்தில் பஸ் நிற்கிறது. இறங்குகிறோம்.

முதல் வேலையாக அந்தப் புத்தகத்தைப் பிரித்துப் பார்க்கிறேன். பாடல் பத்திரமாக இருக்கின்றது.


**வெண்மையான, ஆரோக்கியமான ஒளி வீசும் பற்களுக்கு**

# தந்த லோக சூர்ணம்

[உத்தரவாதமுள்ள பல மூலிகைகள் சேர்ந்து உருவாக்கப்பட்ட பற்பொடி]

**பக்கட் ரூ. 1.00** — **தபாற் செலவு. 65 சதம்**

விபரங்களுக்கு:

**W.K JINADASA,**
**AYURVEDIC PHYSICIAN,**
**161, NORRIS RD,**
**COLOMBO 11.**

**டபிள்யூ. கே. ஜினதாச,**
ஆயுர்வேத வைத்தியர்
161, நோரீஸ் வீதி,
கொழும்பு-11.

---

**எங்கள் கேட்லாக்கிற்கு கீழ்கண்ட கூப்பனை நிரப்பி அனுப்பவும்**

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

'நீ என்ன பெண்ணு, வெட்கப் பட?— நண்பன் தவம் உரிமை யோடு செல்லமாகக் கோபித்துக் கொள்கிறுன்.

அடுத்த பஸ் எடுத்து வீடு வந்து சேர்கின்றேன்.

மனதில் என்றுமில்லாத உணர்ச்சிப் பிரவாகம். இன்பத் தவிப்பு இது தானே?!

எனக்கும் மறு நாள் பிற்பகல் தான் பரீட்சை. அவளது பாட நேரந்தான் எனக்கு மனப் பாடம் ஆயிற்றே!

மறு நாள் —

பாடத்தை மேலோட்டமாக நோட்டமிடுகிறேன். அம்மாவின் முகம் குசினிப் புகையிலிருந்து தற்காலிகமாக விடுபடுகிறது.

'ராசா! எத்தினை மணிக்கு மோனை சோதினை?'

'ஏன்...? இப்ப வெளிக்கிட வேணும்!'- கண்டிப்புத் தொனிக்கிறது என் பதிலில். அத்தனை அவசரம் எனக்கு!

கல்லூரிக்குப் புறப்படுகிறேன்.

என் குறும்புக்காரச் சகோதரி, முன்தினம் பிற்பகல் அவளது வீட்டிற்கு ஏதோ காரியமாகச் சென்ற போது, என்னிடம் கேட்ட கேள்வி நினைவில் முட்டுகிறது—

'அண்ணு! நீங்கள் பேப்பருக்கு பாட்டெல்லாம் எழுதி அனுப்பலாமே!'- இதற்குப்பதில் சொல்ல முயலாது— அல்லது முடியாமல் வந்து விடுகிறேன்.

இப்போது, நண்பன் தவத்திடம் யோசனைகளைப் பரிமாறிக் கொள்கிறேன்.

தொடர்ந்து —

பரீட்சை நடந்து கொண்டிருக்க, நண்பன் தவம் ஆலோசகராகத் துணை புரிகின்றுன்.

நாட்கள் இறக்கை கட்டியிருக்கின்றன போலும்!

விடுமுறை.

இப்போதைய நாட்கள் நத்தை ஆமை போன்றவற்றோடு நட்புப் பூண்டு விட்டனவோ?!

இடையிடையே வரும் சந்தர்ப்பங்கள் 'எங்கள்' சந்திப்பிற்கு வாய்ப்பளிக்காதிருக்கின்றன.

கல்லூரி திறக்கின்றது.

திடுக்கிடும் செய்தியொன்றைச் சகோதரி மூலம் அவள் சொல்கிறுள்...

தனது தந்தையாரின் உத்தியோக உயர்ச்சியையடுத்து, குடும்பம் முழுவதும் மலேசியாவிற்குச் சென்று அங்கேயே தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உடனடியாக ஏற்பட்டுள்ளதாக அவள் கூறுகிறுள்.

தைப் பொங்கல், புத்தாண்டு, பிறந்த தினத் தருணங்களில் தவருது அவளுக்கு வாழ்த்துக்கள் அனுப்பி வைக்கின்றேன்.

இவற்றைத்தான் செய்ய முடிகின்றது என்னுல். ஆனுல் என் உள்ளத்தின் உணர்வுகளை விளக்கிடத் துணிவு வந்ததில்லை. ஒருதலைக் காதலாகவே வளர விட்டேன்.

ஃ

காலம் எவரையும் எதையும் பொருட்படுத்தாது ஓடிக்கொண்டேயிருக்கிறது.

அவளது பெருமையில் பங்கு பெறும் உரிமைக்கான துணிவை நான் பெற்றிருக்கவில்லை.

சந்திக்க முடியாத தொலைவிற்கு — எட்ட முடியாத உயரத்தில் — 'அவள்' சென்று, வென்று வளர்கிறுள்.

என் நினைவின் பசுமையான பகுதிகளை அவளது அழகிய உருவமே

## மாத்திரைக் கதை

### விரக்தி

உலகத்துக்குத் தனது பாடல் கேட்காத தூரத்திலே வானத்தின் உச்சியில் ஓர் ஒதுக்குப் புறத்தில் போய் நின்று அருமையாக இசை மீட்டிவிட்டுப் பூமிக்குத் திரும்பிய வானம்பாடியைப் பார்த்து பூமியிலிருந்த கிளி, 'தோழா, இந்த உலகில் நீ ஓர் ஒப்பற்ற கலைஞன். இசையிலே பேர்போன மகான் நீ. உன்னை ரசிப்பதற்கு யாருமே இல்லாத வான உச்சியில் போய் நின்று எதற்காகப் பாடுகின்றுய்? உன் பாடல் பயனற்றுப் போகிறதே, என்று வருத்தத்தோடு கூறியது.

வானம்பாடியின் கலை தோய்ந்த விழிகள் இரண்டும் ஒரு நிமிடம் நெருப்பை உமிழ்ந்தன. 'உலகத்துக்கு என் பாடல் என்ன மண்ணுங்கட்டிக்கு?' என்று வானம்பாடி கேட்டது. அப்புறம் அது கிளியைப் பார்த்துக் கூறியது.

'நண்பா... வானத்தில் என் பாடலை ரசிக்கிறவர்கள் இல்லை என்று நீ சொல்கிறுய். அந்த இடத்தில் என் பாடலைக் கிண்டல் செய்கிறவர்களும் இல்லை என்பதை நீ தெரிந்து கொள்ள வேண்டும்!'

—காசி ஆனந்தன்.

ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

இதை விட, என்னுள்ளத்தின் வசீகரமான எல்லைக்குள் நானே 'அவளை'ச் சிறைப்படுத்தியிருக்கிறேன் என்று சொல்வது மிகப் பொருந்தும்.

இருப்பினும், என் மனத்தின் அந்தரங்க உணர்வுகள், அவளது இழப்பை ஒரு பெருந் தோல்வியாகவே அங்கீகரித்திருக்கின்றன.

ஆருயிர் நண்பன் தவமும் எனது அன்புச் சகோதரியும் எனது உண்மையுணர்ச்சிகளைக் கௌரவித்து, துணை புரிந்தமையை அரியதொரு ஞாபகமாகவே நான் பெற்றிருக்கிறேன்.

இப்போது அவர்களிருவரும் இன்பமாக இணைந்துள்ள இச் சந்தர்ப்பத்தில், என்னையும்அவளையும்பிணைத்திருந்த கல்லூரிவாழ்க்கையின் மகிழ்ச்சிகரமான விநாடிகள் ஒவ்வொன்றும் எனது சார்பாக எப்போதும் வாழ்த்திக் கொண்டேயிருக்கும்.

எந்த ஞாபகங்கள் எனது ஆத்மாவிலிருந்து இனியனவாக எழுகின்றனவோ, அந்த ஞாபகங்கள் எழுவதற்கு மூலகாரணமாக அல்லது ஆரம்பமாக 'அவளது' ஞாபகமே உள்ளது என நான் நிச்சயமாகவும், திடமாகவும் நம்புகிறேன்.

எனவே,

'அவள்'— புனிதா— எனது இனிய ஞாபகங்களின் திறவுகோல் ஆகிறாள்.

எனது இதயம் மௌனமாக அழுது கொண்டிருப்பினும், 'அவள'து அழகிய ஞாபகமே எனது இலட்சியங்களை ஊக்குவிப்பதில் முதன்மையாக நிற்கிறது.

+

**ஓட்டல் மனேஜர்:** இதென்ன உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? மழைக் கோட்டைப் போட்டுக்கொண்டு சாப்பிடுகிறீர்கள். மழையா பெய்கிறது?

**சாப்பிடுபவர்:** பைத்தியமில்லை. உங்கள் ஓட்டலில் றெயின் கோட் இல்லாமல் வந்தால் எனது ஷேட்டில் சம்பல், கறி, சாம்பார் என்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றைக் கொட்டிவிடுகிறார்கள் உங்கள் பையன்கள்.

**மனேஜர்:** ?...?...?

—பா. ஜெயமாலினி, கிரான்பாஸ்

**இல்லங்கள் தோறும் இன்பமயம் எதனால் உண்டாகிறது?**

**றன்பக்**

மூட்டைப் பூச்சி மற்றும் கொசு போன்ற விஷக் கிருமிகளையும் ஹதம் செய்து, மீண்டும் பரவ விடாமல் செய்யும்.




**றன்ரெட்**

பெரிய - சிறிய எல்லா எலிகளும் நொடிப் பொழுதில் மயங்கி விழுந்து இறந்துவிடச் செய்யும்.

தயாரிப்பாளர்கள்:

**அப்துல்லா இன்டஸ்ட்ரீஸ்**

அன்ட் பேப்பர் பேக்ஸ் உற்பத்தியாளர்கள்

72, பாபர் வீதி, கொழும்பு-13.

நாடக விமர்சனம்

# ‘பித்தலாட்டம்’

யாழ் ‘கலை அரங்கத்’தினரின் ஆறாவது தயாரிப்புத்தான் நகைச்சுவை நாடகமாகிய ‘பித்தலாட்டம்’. கே.கே.மதிவதனன் கதை வசனம் எழுத, ‘வரணியூரான்’ நெறிப்படுத்தியிருக்கிறார். கடந்த 27.2.70-ல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டு, அமோக பாராட்டைப் பெற்றது, இந்த நாடகம்.


இளைப்பாறிய கிளாஸ் திறீ கிளார்க்காக— மனைவிக்குப் பயந்தவராக ஆறுமுகம் சித்தரிக்கப்படுகிறார். ஆனாலும் சந்தர்ப்பங்கள் சாதகமாக வரும் வேளைகளில் மனைவியை என்ன பாடு படுத்துகிறார். இந்தப் பாத்திரத்தை ஏற்று வெகு திறமையாக நடித்து, ‘சபாஷ்’ வாங்கி விடுகிறார், எஸ். எஸ். கணேசபிள்ளை. தனது அனுபவத்தை நன்றாகப் பயன் படுத்தியிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். சாராயம் குடித்து விட்டுவந்து மச்சான் இராசதுரைக்கு ‘திரிலோகமும் புகழும் சுந்தர’ என்று பக்கப்பாட்டுப் பாடும் கட்டத்தில் கரகோசத்திலும், சிரிப்பிலும் கொட்டகையே அதிர்ந்தது. இவரது மனைவி சிவகாமியாக நடித்த ஜெயகௌரியும் நன்றாக நடித்து ஒத்துழைத்தார். இவரது அண்ணன் இராசதுரையாக வரும் ஏ. அருளானந்தம், தானும் ஒரு சிறந்த நடிகன்தான் என்பதை நிரூபித்தார். இராசதுரையின் மனைவியாக சந்திரபிரபா நடித்தார். பாத்திரம் சிறிதுதான்; ஆனால் அதைச் செவ்வனே செய்து நடிப்பில் தானும் சளைத்தவரல்ல என்பதைக் காட்டி விடுகிறார். இவர்களைத் தவிர, செல்லத்துரை, செல்லம்மாவாக வரும் கந்தசாமி ஜெயந்தி ஆகியோரும், குறை சொல்ல முடியாதவாறு நடித்தனர். பரிமளமாக ஸ்ரீகாந்தனும், சிவக்கொழுந்துவாக கே. சிவதாசனும், தரகராக ரி. எஸ். பிச்சையப்பாவும், டாக்டர்களாக ஏ. சிவதாசனும், ஆர். இராசரத்தினமும் தோன்றி திருப்திகரமாகத் தத்தம் பங்கைச் செய்தனர்.

சரியாக எட்டரை மணிக்கே நாடகம் முடிந்து விட்டது, சிறப்பம்சங்களில் ஒன்று. தயாரிப்பு விஷயத்தில் மிகவும் நிதானத்தை கடைப்பிடித்திருக்கிறார்கள் என்பதைக் கவனிக்கக் கூடியதாக இருந்தது. பொதுவாக நகைச்சுவை நாடகங்களில் அவைகள் கவனிக்கப் படுவதில்லை. சிறந்த காட்சியமைப்பும், விசேஷ ஒலி ஒளி அமைப்பும், நாடகத்திற்கு மேலும் மெருகூட்டுவனவாக இருந்தன.

மொத்தத்தில் ‘பித்தலாட்டம்’ தயாரிப்பாளர் வரணியூரானுக்கும், யாழ் கலையரங்கத்தினருக்கும் மிகப் பெரிய வெற்றி என்பதை ஒப்புக் கொள்ளலாம். நாடகத்தில் தவிர்க்கக்கூடிய சிறு குறைகள் தென்பட்டாலும், பாராட்டக்கூடிய ஒரு சிறந்த நாடகம், பித்தலாட்டம்.

—ஏகலைவன்

தேர்தல் சீசன்




இலங்கை வரலாறு- -ஆதிகாலம்

வே. க. நடராசா அவர்களின்

**பண்டைய ஈழம்**

1ம், 2ம் பாகங்கள்

[திருத்திய இரண்டாம் பதிப்பு]

ஜி. சி. ஈ உயர்தர, சாதாரண வகுப்புகளுக்கேற்ற வரலாற்றுப் பாட நூல்

வெளியீடு:

சேது நூலகம், கரவெட்டி.

விற்பனை உரிமை:

ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

# புலம்பல்

—எஸ். அகஸ்தியர்

சந்திரனுக்குப் பயணம் வைத்த பூலோக மனிதனைக் கண்ட அண்ட கோளங்கள், ஒரு கணம் மண்டைகள் நொறுங்க அந்தகாரித்து நடு நடுங்கின.

இவனுக்குத்தான் பூலோகத்தில் எத்தனையோ சோலிகளிருக்கின்றனவே. எல்லாவற்றையும் விட்டு விட்டு, இந்த மூளை கெட்ட வேலையில் இவன் ஏன் இறங்கினான்?' என்று சலிப்போடு கேட்டது சூரியகாந்தி.

இந்த மனிதனால் நாங்கள் எவ்வளவு பக்தியோடு பூஜிக்கப் பட்டோம். அந்த 'அந்தஸ்தை'க் கூட இவன் கெடுத்து விட்டானே' பாவி இதற்கெல்லாம் காரணம் அந்த டார்வீன்தான். அவன் தலையிலே இடி விழ' என்று சொல்லி ஒரு பாட்டம் அழுதது அம்புலிமாமா.

நான் எவ்வளவு சுதந்திரத்தோடு ஏகாந்தமாய்த் திரிந்தேன் தெரியுமா? அதிலே மண்ணைப் போட்டு இந்த மனிதன் என்னைச் சின்னாபின்னமாக்கி விட்டானே' என்று சற்றுக் 'கடுகடு'த்தது வாயு மச்சான்.

அண்ட கோளங்களுக்குத் திசையையும் ஒளியையும் கொடுத்து வருகின்ற எங்களுக்கே இவன் வழி காட்டத் தொடங்கி விட்டானே?' என்று 'நம்பிக்கையிழந்து' கேட்டன தாரகை முனிகள்.

அயலானை நேசிக்கத் தெரியாத மடையர்களே நான் மட்டும் 'பூமாதேவி' என்ற மனிதனின் ஆசார வாக்கிற்குள் அடைபட்டுச் சித்திரவதைப்படுகின்றேன். அப்படி நீங்களும் இனி அனுபவித்தால் என்னவாம்?' என்று வியாகுலத்தோடு சற்று 'ஆவேசமாக'வே கேட்டது பூமித்தாய்.

அப்படி நீ என்ன சித்திர வதைப்பட்டாய்? என்று ஏக காலத்தில் கேட்டன அண்ட கோளங்கள்.

உடனே பூமித்தாய் சொல்லிற்று.

மனிதன் பேதமில்லாமல் சமத்துவமாய் வாழ்வான் என்று நம்பினேன். ஆனால், அவன் காலகதியில், 'தன்னிச்சை' கொண்டு தனி ஏக ஆதிக்கம்' செய்யக் கிளம்பி, நெஞ்சைப் பிளந்தது போல என்னை வெட்டிக் கூறு போட்டுவிட்டதால், ஒருவனை ஒருவன் அடித்துச் சாகத் தொடங்கிவிட்டான். இப்போ அவனுக்குப் புகலிடம் தேவை அதற்காகவே அண்ட கோளத்தைப் பிடிக்கக் கிளம்பினான். வந்தவனுக்கு இடங்கொடுங்கள். ஆனால், கூறுபோட விடாதீர்கள்.

அண்ட கோளங்கள் இக்கூற்றினை எல்லாம் கேட்டு அசந்து போய் ஏக காலத்தில் பெருங் குரலெழுப்பிக் கேட்டன

பூமித்தாயே இதெல்லாம் உண்மைதானா? இந்த மனிதன் அப்படிப்பட்டவனா? உனக்கு இது எப்படித் தெரியும்?

பூமித்தாய் அமைதியாகப் பதில் சொன்னாள்.


நான் இந்த மனிதனுடன் தான் அன்றாடம் செத்து வாழ்கிறேன்!?

அண்ட கோளங்கள் ஒன்றும் பேசாமல் ஒன்றையொன்று பார்த்து விழித்தன.

அப்போது அந்த அண்ட கோளங்களெல்லாம் அதிர்ந்து இடியுண்டதுபோல் 'திடீ'ரென்று டார்வீனின் குரல், ஓங்காரித்துக் கேட்டது.

சா பிணங்களே! ஏன் வீணாகப் புலம்புகின்றீர்கள்? மனிதன் இந்த அண்ட சராசரங்களனைத்தையும் வெல்வான்.

அண்ட கோளங்கள் 'மூச்சு' விடவில்லை.



**தமிழினமே கண்வளராய்!**

மகன்: நான் எந்தத் தமிழ்க் கூட்டத்திற்குப் போனாலும், தமிழ் மக்களே விழித்திருங்கள்-விழித்திருங்கள் என்று பேச்சாளர் பேசுகிறார்களே ஏனப்பா தமிழ் மக்கள் நித்திரைச் செல்வர்களா?

*With best Compliments*

*of*

# RAJAH BEEDI CO.

COLOMBO— 14

## நமது அரசியல் வாதிகள்

### சொன்னதும்

(1) உங்கள் குழந்தைகள் நாளைய இலங்கையின் விவசாயிகளாக வாழ கற்றுக்கொடுக்க வேண்டும்—ஓர் அமைச்சர்.

(2) தமிழர் ஒரே கட்சியின் கீழ் ஒன்றுபட வேண்டும்'

(3) பலாத்கார முயற்சிகளை பலாத்கார முறைகளிலேயே நாம் முறியடிப்போம்.

(4) மக்கள் தம் வாக்குகளை சரியான முறையில் பாவிக்க இன்னும் கற்றுக் கொள்ளவில்லை.

(5) இவ்வருட முடிவுக்குள் நாம் அரிசி உற்பத்தியில் தன் நிறைவு பெற்று விடுவோம்.

### சொல்ல மறந்ததும்

(1) நாளைய இலங்கையின் மந்திரிகளாக வாழ நான் அவர்களுக்கு கற்றுக் கொடுப்பேன்.

(2) அந்த ஒரே கட்சி என் கட்சியாகவும் இருக்க வேண்டும்.

(3) சாத்வீக முயற்சிகளையும் பலாத்கார முறைகளிலேயே நாம் முறியடிப்போம்.

(4) இதனால்தான் எம்மைப் போன்றோர் பாராளுமன்றத்தில் உறுப்பினராவது சுலபமாக உள்ளது.

(5) அப்படி பெற தவறும் கட்டத்தில் அதற்கு அழகழகான காரணங்களைத் தருவோம்.

**கரிகாலன்**




தரமான கதைகளுக்கு
சுவையான நாவல்களுக்கு
கருத்து செறிந்த கட்டுரைகளுக்கு
**கல்கி** படியுங்கள்

**த. தம்பித்துரை அன் சன்ஸ், 226 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**காரியாலயம்: 84 லோறிஸ் றோட், கொழும்பு-4**


### புதுமைப்பித்தனின் கருத்துக்கள்

நம் நாட்டுத் தமிழாராய்சி:- நம்மவர்க்கு நம் இலக்கியங்கள் பல்லாயிரம் வருஷங்களுக்கு முந்தியவை என்று சொல்லிக் கொள்வதில் ஒரு பெருமை. டார்வின் பரிணாமத் தத்துவப்படி தோன்றிய முதல் குரங்கே தமிழ்க் குரங்கு என்றால்தான் நம்மவர்க்குத் திருப்தி.

ஃ ஃ

கடையில் பிஸ்கோத்து வாங்குவது போலவோ கவர்ண்மெண்ட் அதிகாரம் செய்வது போலவோ, கவிராயருக்கு ஆர்டர் கொடுக்க முடியாது. அவன் பிறப்பது பாஷையின் அதிர்ஷ்டம்.

ஃ ஃ

வாழ்க்கை:- பெரிய மீன் சின்ன மீனைத் தின்னலாம் ஆனால் சின்ன மீன் அதற்கும் சின்ன மீனைத் தின்றால், பெரிய மீன் 'குற்றஞ் செய்கிறாய்' என்று தண்டிக்க வருகிறது. இது தான் சமூகம்.

ஃ ஃ

வறுமை முதலாளித்துவத்தின் விலக்க முடியாத நியதி. வியாதியும் கூட.

—சுந்தர்




தேவி... சிறீ தேவி... உனைத் தேடி அலைகின்றேன்..'



'ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி மாமாவைப் பாரு... அவர் ஆம்பிளையா பொம்புளையா என்றுண்ணு கேளு...'



'மறைந்திருந்து பார்க்கும் மர்மமென்ன'



'தென்றலே நீ வா... வா...'

EMPEE INDUSTRIES

Selvam

# EMPEE INDUSTRIES

TEXTILE MANUFACTURERS
&
TEXTILE YARN DYERS.

**PALLANSENA, KOCHCHIKADE.**

*Sole Distributors for Textile Products.*

**SILK PALACE, KOCHCHIKADE.**

# எம்பீ இன்டஸ்றீஸ்

புடவை உற்பத்தியாளர்கள், நூல் சாயம் தீட்டுவோர்

**பள்ளன்சேனே, கொச்சிக்கடை.**

ஏக விநியோகஸ்தர்கள்:

**சில்க் பலஸ், கொச்சிக்கடை.**

Registered as a News Paper at G.P.O    Regd No. QB—934

வாக்காளப் பெருமக்களே!

ஒரேயொரு விஷயத்தில் எமது கட்சிகளுக்குள் கருத்து ஒற்றுமை உண்டு. அது "முயல் மார்க் நூலே தரமானது" என்பதுதான்.




விற்பனையாகிறது
நீர்வை பொன்னையனின்
'உதயம்'
(சிறுகதைத் தொகுதி)
விலை ரூபா 2,
கிடைக்குமிடம்
ச. கிருஷ்ணசாமி
33, பெரியகடை, யாழ்ப்பாணம்

வானவில் வர்ணங்களில்
வகைவகையான
"முயல் மார்க்"
தையல் நூல்களை எங்கும்
பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பாளர்கள்:

## சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி,

கொழும்பு-12




101/4 செட். பெனடிக்ஸ் வீதி, கொட்டாஞ்சேனையிலுள்ள சி. சிவஞானசுந்தரம் அவர்களால் 194 ஏ, பண்டாரநாயகா வீதியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.